வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 30.11.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 360 | பக்கங்கள் : 16




# ஒமைக்ரோன் திரிபு வைரஸ் நாடு முழுவதும் பரவக்கூடும்!

## சுகாதார சேவை பிரதி பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு, நவம்பர் 30

“புதிய ஒமைக்ரோன் திரிபு வைரஸால் பாதிக்கப்பட்டு நாடுகளிலிருந்து பயணிப்பவர்கள் இந்தத் திரிபை காவிச் செல்கிறார்களா என்பதை அடையாளம் காண முடியாது” என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் “இதனால், நாடு முழுவதும் வேகமாக இந்தத் தொற்று பரவக்கூடும்” என்று எச்சரித்துள்ளார்.

15

## தொற்றுக்கு 23 பேர் பலி!

கொழும்பு, நவ. 30

நாட்டில் கொரோனா தொற்றால் நேற்றுமுன்தினம் 23 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

இதன்படி, 30 -59 வயது பிரிவில் 3 ஆண்கள், ஒரு பெண்ணாக 4 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட 13 ஆண்கள், 6 பெண்கள் என 19 பேருமாக 23 பேர் உயிரிழந்தனர்.

இந்த உயிரிழப்புக்களுடன்

15

## திடீரென வீசிய சுழல் காற்றால் மண்டைதீவில் படகு மூழ்கியது!

யாழ்ப்பாணம், நவ. 30

மண்டைதீவு கடலில் திடீரென ஏற்பட்ட சுழல் காற்றால் இரு றோலர் படகுகள் கடலில் மூழ்கின. விரைந்து செயல்பட்ட சக மீனவர்களால் படகில் இருந்த மீனவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

மண்டைதீவு முனை பகுதியில் நேற்று மதியம் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

15

## பாணின் விலை மட்டுமே யாழ்ப்பாணத்தில் உயரும்!

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். மாவட்டத்தில் பாணின் விலைமட்டுமே 10 ரூபாயால் அதிகரிக்கப்படுகின்றது. இதனால், 450 கிராம் எடை கொண்ட ஒரு இறாத்தால் பாணின் விலை 85 ரூபாயாக இருக்கும். ஏனைய வெதுப்பக பொருட்களின் விலைகளில் மாற்றம் ஏற்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்

15

## நாட்டின் பல இடங்களில் மின்சாரம் தடைப்பட்டது

கொழும்பு, நவ. 30

கொழும்பு மற்றும் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் நேற்று மாலை முதல் மின்சாரம் தடைப்பட்டது.

கொத்மலையிலிருந்து பியகம உப நிலையத்திற்கு மின் வழங்கும் இரு வடங்கள் துண்டிக்கப்பட்டமையாலேயே மின்சாரம் தடைப்பட்டது.

15

## எமது வளங்களால் வரும் வருமானத்தில் எம் தேசத்தை அபிவிருத்தி செய்யுங்கள்!



### கஜேந்திரன் எம். பி. பாராளுமன்றில் கோரிக்கை

கொழும்பு, நவ. 30

“மன்னாரில் எரிசக்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் நாட்டின் கடனை அடைக்க முடியும் என்ற கருத்து வலுசக்தி அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ளது. அது நல்ல விடயமே. எங்கள் தேசத்தில் கண்டுபிடிக்கப்படும் வளங்கள் மூலம் கிடைக்கும் வருமானம், எங்கள் தேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்காக பயன்படுத்தப்பட வேண்டும். எமது மக்கள் புறக்கணிக்கப்படுகின்ற நிலைமை தொடரக்

15

## சித்தார்த்தன் தலைமையில் மாவை இணைவது மகிழ்ச்சி

### செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 30

சித்தார்த்தன் தலைமையில் எதிர்காலத்தில் மாவை சேனாதிராஜா இணைவது பெருமகிழ்ச்சி அளிக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான

15

## திருமலை எண்ணெய் குதம் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

### பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, நவ. 30

திருகோணமலை எண்ணெய் குதங்களை மீளப் பெற்றுக்கொள்வதாக அரசு தெரிவித்தபோதும் இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை. அப்படியானால் திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன? சீனா, அமெரிக்காவுக்கு நாட்டின் ஏனைய வளங்களை வழங்கியுள்ளதுபோல் இந்திய அரசுடன் இது தொடர்பில் வேறு ஏதாவது ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் அரசாங்கம் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்

15

## எரிபொருள் விநியோக அதிகாரம் இந்தியாவுக்கு வழங்கப்படாது



### வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில

கொழும்பு, நவ. 30

எமது நாட்டில் வடக்கு,கிழக்கு உட்பட எந்தப்பகுதிக்குமான எரிபொருள் விநியோகிக்கும் அதிகாரம் இந்தியாவுக்கு வழங்கப்படாது என வலு சக்தி அமைச்சர் உதய கம்ம ன் பில தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்

15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## எமது வளங்களால்...

கூடாது", என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவு திட்டத்தின் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கடந்த 27ஆம் திகதி முல்லைத்தீவில் இருந்து புதுக்குடியிருப்புக்கு செல்லும் வீதியில் முள்ளிவாய்க்கால் பெயர் பலகையை படம் எடுத்த ஊடகவியலாளர் ஒருவர்மீது இராணுவத்தினரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது தொடர்பில், கண்துடைப்புக்காக மூன்று இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவங்கள் தமிழர்கள் மீது கடந்த காலங்களில் இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய போர்க் குற்றங்கள் மற்றும் இனவழிப்புக் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறல் இல்லாத காரணத்தினாலேயே இந்த சம்பவங்கள் தொடர்ந்தும் கடந்து கொண்டிருக்கின்றன. எங்களைப் பொறுத்தவரையில் இந்த குற்றங்களுக்கு சர்வதேச விசாரணைகளை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். இதேபோன்று நடந்த சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்துகின்றோம்.

இதேவேளை, 27ஆம் திகதி மாவீரர் தின நிகழ்வுகளை செய்ய முற்பட்ட போது, சப்பாத்து கால்களுடன் இராணுவத்தினர் துயிலும் இல்லங்களில் மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டதுடன், அங்கு முகாம்களையும் அமைத்துள்ளனர். அங்கிருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

மன்னாரில் எரிசக்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நாட்டின் கடனை அடைக்க முடியும் என்ற கருத்து வலுசக்தி அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ளது. அது நல்ல விடயமே. எங்களின் தேசத்தில் கண்டுபிடிக்கப்படும் வளங்கள் மூலம் கிடைக்கும் வருமானம், எங்கள் தேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். எமது மக்கள் புறக்கணிக்கப்படுகின்ற நிலைமை தொடரக்கூடாது. இல்மனைட் அகழப்படுகின்றது. அதனால் கிடைக்கும் வருமானம் முழுவதும் அந்தப் பிரதேசங்களுக்கு வெளியே கொண்டு செல்லப்படுகின்றது. இந்த நிலைமை தேசங்களுக்கு இடையே இடைவெளியையே அதிகரிக்கும்.

காற்றாலை மின் உற்பத்தியிலும் வேலை வாய்ப்புகள் அந்தப் பிரதேசங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளிக்கும்முகமாக இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸநாயக்க கூறுகையில்,

இந்த நாட்டில் உள்ள வளங்கள் நாட்டு மக்களுக்கே உரியது. பிரதேசங்கள் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் இனம், பிரதேச அடிப்படையில் ஒதுக்க முடியாது. ஆனால், அந்தப் பிரதேசத்திற்கு விசேட அந்தஸ்து வழங்குவது குறித்து அனைவரும் கலந்துரையாடி இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால், பிரதேச அடிப்படையில் அவற்றை ஒதுக்க முடியாது இதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

## திருகோணமலை...

என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. யான கபீர் ஹாசிம் வலுறுத்தினார்

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற மின்சக்தி அமைச்சு, வலுசக்தி அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் கூறுகையில்,

இந்தியாவுக்கு வழங்கி இருக்கும் திருகோணமலை எண்ணெய்க்குதங்களை மீளப் பெற்றுக் கொள்வதாக அரசு தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் தற்போது எமது அரசின் காலத்தில் மேற்கொண்ட ஒப்பந்தம் காரணமாக அதனை மீளப்பெற முடியாதுள்ளதாக தெரிவித்து, அதனை தட்டிக் கழித்து வருகிறது. எமது அரசின் காலத்தில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் இந்தியாவுடன் அது தொடர்பில் புரிந்துணர்வு கடிதப் பரிமாற்றங்களே நடைபெற்றுள்ளன. எந்தவித ஒப்பந்தமும் எமது அரசு செய்யவில்லை.

எனவே இந்த அரசு அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்கு எமது அரசின் கால புரிந்துணர்வு கடிதப் பரிமாற்றங்கள் எந்தவித தடையையும் ஏற்படுத்தப் போவதில்லை. மற்றும் தற்போதைய அரசு கூறுவதுபோல் எமது அரசும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் மேற்படி எண்ணெய்க்குதங்களை வழங்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷ அரசு கொழும்புதுறைமுக நகர நிலத்தை சீனாவுக்கு உரித்துரிமையாக வழங்கி இருந்தது. அந்த உரித்துரிமையை இல்லாமலாக்குவதாக நாங்கள் அன்று வாக்குறுதி அளித்தோம். அதேபோன்று ஆட்சிக்கு வந்ததுடன் சீனாவுடன் மோதி, துறைமுக நகரின் உரித்துரிமையை இல்லாமலாக்கி குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

ஆனால் இந்த அரசு திருகோணமலை எண்ணெய் குதங்களை மீளப் பெற்றுக் கொள்வதாக தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்த போதும் இதுவரை அவற்றை பெற்றுக்கொள்ளாமல் இருக்கின்றது. அப்படியானால் திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன ? சீனா, அமெரிக்காவுக்கு நாட்டின் ஏனைய வளங்களை வழங்கியுள்ளது போல் இந்திய அரசுடன் அது தொடர்பில் வேறு ஏதாவது ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் அரசு நாட்டுக்கும் மக்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

## எரிபொருள்...

கிழமை இடம்பெற்ற மின்சக்தி அமைச்சு, வலுசக்தி அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே வலுசக்தி அமைச்சர் உதய கம்மன் பில இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எழுந்து, நான் வலுசக்தி அமைச்சரிடம் ஒரு தெளிவுபடுத்தலை பெற விரும்புகின்றேன். இலங்கைக்கு எரிபொருள் விநியோகிக்கும் உரிமையை இந்தியாவுக்கு வழங்கி இந்தியாவிடமிருந்து 3.5 பில்லியன் டொலரை இலங்கை கடனாக பெற்றுக்கொள்ளவுள்ளதாக அரசு சார்பான ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இது உண்மைதானா? அந்தக்கடனைப்பெறுவதற்காகவா நிதி அமைச்சர் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்? இது தொடர்பில் உங்களால் தெளிவுபடுத்த முடியுமா எனக்கேட்டார்.

இந்தக்கேள்விக்கு வலு சக்தி அமைச்சர் உதய கம்மன் பில பதிலளிக்கும் போதே எமது நாட்டில் வடக்கு,கிழக்கு உட்பட எந்தப்பகுதிக்குமான எரிபொருள் விநியோகிக்கும் அதிகாரத்தை இந்தியா எம்மிடம் கேட்கவும் இல்லை. இந்தியா கேட்டாலும் நாம் வழங்கப்போவது மில்லை. உங்கள் தரத்தில் எம்மை ஒப்பிட வேண்டாம் என்றார்.

## நாட்டின் பல...

மகாவலி நீர் மின்சார உற்பத்தி நிறுத்தப்பட்டமையால் வேறு சில உப நிலையங்கள் நின்றன. இதனாலேயே நாட்டின் பல பகுதிகளிலும் மின்சாரம் தடைப்பட்டது.

கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, குருநாகல், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பல இடங்கள் மின்தடையால் பாதிக்கப்பட்டன. எனினும் சில பகுதிகளில் மின்சாரம் இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# காங்கேசன்துறைக்கு நேரடியாக எரிபொருளை விநியோகியுங்கள்

## சார்ள்ஸ் எம். பி. அரசிடம் வேண்டுகோள்

கொழும்பு, நவ. 30

கொழும்பிலிருந்து நேரடியாக ரயில் மூலம் காங்கேசன்துறைக்கு எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரிக்கை விடுத்த தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எரிபொருள் விலை அதிகரிப்பு மக்களுக்கு பெரும் சுமையாக அமைந்திருப்பதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற மின்சக்தி அமைச்சு, வலுசக்தி அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தற்போது கொழும்பிலிருந்து வடக்கிற்கான எரிபொருட்கள் பௌசர்கள் மூலமே காங்கேசன்துறையிலுள்ள எரிபொருள் விநியோக நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் வீண் செலவுகளும் கால தாமதங்களும் ஏற்படுகின்றன.

எனவே, கொழும்பிலிருந்து நேரடியாக ரயில் மூலம் காங்கேசன்துறைக்கு எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் செலவுகள் குறைவதுடன் காலதாமதமும் தவிர்க்கப்படும்.

இதேவேளை எரிபொருட்களின் விலைகள் தொடர்ந்தும் அதிகரிக்கின்றன. இது மக்களுக்கு பெரும் சுமையாக மாறியுள்ளது. அரசு தமக்கு ஏதாவது நிவாரணத்தை வழங்கினால் மட்டுமே எரிபொருள் விலை அதிகரிப்பை தவிர்க்கலாம் என அமைச்சர் உதய கம்மன் பில தெரிவித்துள்ளார்.

எனவே அரசு அமைச்சுக்கு ஏதாவது நிவாரணங்களை வழங்கி எரிபொருள் விலைகளை அதிகரிக்காதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை காற்றாலை மின் நிலையம் பிரதம மஹிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது பிரதமர் அனுராதபுரம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய 4 மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுமென வாக்குறுதியளித்திருந்தார்.

வுவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு இது வரை எந்தவொரு நியமனமும் வழங்கப்படவில்லை.

அனுராதபுரத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப்பரீட்சை நடந்தது. எனவே பிரதமரின் வாக்குறுதி பொய்யா என்ற கேள்வி எழுந்துள்ளது . எனவே இது தொடர்பில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

இங்கு பல குடியேற்ற கிராமங்கள் உள்ளன. இவ்வாறான கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கை இல்லை. இவ்வாறான கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## தொற்றுக்கு...

நாட்டில் கொரோனா தொற்றால் இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 14ஆயிரத்து 308ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## சித்தார்த்தன்...

ரெலோவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்ற வேண்டும். அந்த வரலாற்றுத் தேவையை உணர்ந்து கொண்டுள்ளோம். இதன் முதல்கட்ட கலந்துரையாடல் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சி தலைவர்களுக்கிடையில் நடைபெற்றது. அதற்குப் பெரும் ஆதரவை அனைவரும் தெரிவித்திருந்தனர். இருப்பினும் சித்தார்த்தனே எங்களோடு முனைப்பாக தொடர்ந்தும் செயலாற்றினார். மற்றக் கட்சித் தலைவர்களைச் சந்திப்பதற்கும் கூட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும் அளப்பரிய பங்களிப்பைச் செய்தவர் சித்தார்த்தன்.

தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான ஒருமித்த நிலைப்பாட்டை எட்டும் வகையிலே கடந்த சில மாதங்களாக சந்திப்புகள் நடைபெற்று வருகின்றன. இதில் காத்திரமான வெற்றியும் கண்டிருக்கின்றோம். தற்போது பல கட்சித் தலைவர்கள் சேர்ந்து முன்னெடுக்கும் நிலைமைக்கு இது வளர்ச்சி கண்டுள்ளது.

இதில் பல கூட்டங்களில் மாவை சேனாதிராஜா கலந்துகொண்டிருந்தாலும் இறுதி நேரங்களில் பின்வாங்கும் போக்கைக் கடைப்பிடித்து இருந்தார். அதற்கான காரணத்தை இப்போதுதான் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். இதனை ஏற்கனவே தெளிவுபடுத்தி இருந்தால் இன்னும் துரிதமான முன்னேற்றத்தை இந்த விடயத்தில் அடைந்திருக்க முடியும்.

இருப்பினும் இந்த விடயங்களைச் சித்தார்த்தனும் இணைந்தே முன்னெடுத்திருந்தார் என்பதை மாவை சேனாதிராஜா நன்கு அறிந்திருந்தார்.

சித்தார்த்தன் தலைமை தாங்கும் ஒருமித்த நிலைபாட்டை முன்னெடுப்பில் மாவை சேனாதிராஜா கலந்துகொள்ளவதில் விருப்பத்தைத் தெரிவித்திருப்பது பெரு மகிழ்ச்சி அளிக்கின்றது. அதை நாம் வரவேற்கின்றோம்” - என்றார்.

## திடீரென வீசிய...

இந்த சம்பவத்தில் றோலர் படகு ஒன்று கடலில் மூழ்கிய நிலையில், மற்றைய படகை ஏனைய மீனவர்கள் தமது படகுகளில் கட்டி இழுத்து வரப்பட்டதாகத் தெரிய வந்தது. (ஐ)

## ஒமைக்ரோன்...

நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை விடுத்தார்.

மேலும், “நமது நாட்டில் நாம் செய்யும் மரபணு பரிசோதனை மூலம் மட்டுமே இந்த வைரஸை கண்டறிய முடியும். மாதிரிகள் மூலம் கண்டறியப்படும் நிலைமை வரை வைரஸ் நாடு முழுவதும் பரவக்கூடும்.

“நாட்டில் உள்ள மக்கள் இந்த மாறுபாட்டை காவிச் செல்கின்றனரா என்பதை அடையாளம் காண முயற்சிப்பதை விட, நாட்டுக்குள் நுழைவதற்கான வழிவகைகளைக் குறைப்பது முக்கியம்.

“சாத்தியமான முடக்கத்தைப் பொறுத்தவரை, இந்த நேரத்தில் நாட்டை மூடும் திட்டம், சுகாதார அமைச்சிடமோ அல்லது அரசாங்கத்திடமோ இல்லை என்றும் அவர் கூறினார்.

## பாணின் விலை...

சங்கம் மற்றும் யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கங்களுடன் மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) மற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் பாண் உற்பத்தி மற்றும் விலை தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கோதுமை மாவின் விலை அதிகரித்தமையால் ஒரு இறாத்தல் பாணின் விலையை 85 ரூபாயாக அதிகரிக்க முடிவு எட்டப்பட்டது. ஏனைய வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் தீர்மானிக்கப்பட்டதாக யாழ். மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது. (ஐ)

# பெரும் நெருக்கடியை சந்திக்கவுள்ளது நாடு!

## சபையில் ரணில் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 30

நாட்டின் தற்போதைய அந்நிய செலாவணி மற்றும் தங்க கையிருப்பு பற்றிய தகவல்களை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சபையில் நேற்று உரையாற்றிய ரணில் விக்ரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துக்கு அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களை பாராளுமன்றத்தில் இதுவரை சமர்ப்பிக்கவில்லை என குற்றம் சாட்டினார்.

தற்போது நாம் எதிர்கொள்ளும் அந்நியச் செலாவணி பிரச்னை தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்துகொள்ள இந்த ஆவணங்களை சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் எண்ணெய் மற்றும் நிலக்கரி வாங்குவது பற்றி பேசப்பட்டது. ஆனால், அந்நிய செலாவணி இல்லையென்றால், மற்ற நாடுகளுக்கு எவ்வாறு பணம் செலுத்துவது என்றும் ரணில் விக்ரமசிங்க கேள்வியெழுப்பினார்.

நாட்டில் எரிபொருள் இல்லாதமையினால் எதிர்காலத்தில் மின்சார



துண்டிப்பு ஏற்படக் கூடும் என்றும் இந்த நிலைமை ஏற்பட்டால், மக்கள் எவ்வாறு நெருக்கடியை எதிர்கொள்வது என்பது குறித்த ஒரு திட்டம் இருக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் இந்த நிலைமை தொடர்ந்தால் 2022 மார்ச் மாதத்துக்குள், உணவுப் பற்றாக்குறையுடன் நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொள்ளும் எனவும் ரணில் விக்ரமசிங்க எச்சரித்தார்.

# எரிபொருள் தட்டுப்பாடு மின்துண்டிப்பு இருக்காது

கொழும்பு, நவ. 30

இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக கூறப்படுகின்ற போதிலும் மின்சார துண்டிப்பு இருக்காது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் எரிபொருளுக்கு போதிய அன்னியச் செலாவணி இல்லை என்ற பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்கவின் கருத்துக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை பராமரிப்புக்காக 50 நாட்களுக்கு மூடுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் இந்த காலப் பகுதியில் நாட்டின் மின்சார தேவை நீர் மின் உற்பத்தி மூலம் பூர்த்தி செய்யப்படும் என்றும் அமைச்சர் பதிலளித்தார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் திறக்கப்பட்ட பின்னரும் மின் உற்பத்திக்கு கூடுதலாக 40 நாட்களுக்கு போதுமான எரிபொருள் தங்களிடம் உள்ளது என்றும் உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

# ஐ. தே. கவிலிருந்து அர்ஜுன விலகல்!



கொழும்பு, நவ. 30

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து முன்னாள் அமைச்சரான அர்ஜுன ரணதுங்க விலகுவதாக அறிவித்துள்ளார்.

தனது விலகல் கடிதத்தை நேற்று அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தார் என்றும் கூறினார். (ஐ)

# யுகதனவி ஒப்பந்தம்; விசாரணை டிசெ. 16

கொழும்பு, நவ. 30

கெரவலப்பிட்டிய 'யுகதனவி' ஒப்பந்தத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களை எதிர்வரும் 16ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேற்படி விவகாரம் தொடர்பான மனுக்கள், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்த்தன, விஜித் மலல்கொட மற்றும் எல்.ரீ.பி தெஹிதெனிய ஆகிய ஐவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

இதன்போதே எதிர்வரும் 16 மற்றும் 17 ஆம் திகதிகள் விசாரணைக்கான தினங்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

யுகதனவி ஒப்பந்தத்துக்கு ஆளுங்கட்சியில் உள்ள பங்காளிக்கட்சிகளே கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, ஐக்கிய மக்கள் சக்தியினர், ஜே.வி.பியினர் உட்பட மேலும் பல தரப்பினரே மனுக்களை தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# யாழ். மாநகர முதல்வருடன் ஜேர்மன் தூதுவர் சந்திப்பு!

யாழ்ப்பாணம், நவ. 30

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஹோல்ஜர் செயுப்ர்ட்டுக்கும் யாழ். மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

யாழ். மாநகர சபையில் இடம்பெற்ற இந்த சந்திப்பில், தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையான சமஷ்டி அடிப்படையிலான தீர்வை பெற்றுக் கொள்வதற்கும், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன அழிப்பு உட்பட்ட அநீதிகளுக்கு நீதியை பெற்று கொடுப்பதற்கும் ஜேர்மன் உள்ளிட்ட சர்வதேச சமூகம் உதவ வேண்டும் என்ற கோரிக்கையை தூதரிடம் முதல்வர் முன்வைத்துள்ளார்.

அத்துடன், யாழ். மாநகர சபைக்கும் ஜேர்மனியின் பிரதான நகரங்களுடன் இரட்டை நகர் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டு இணைந்து செயல்படுவதற்கும் உதவ வேண்டும் என்றும் முதல்வர் தூதுவரிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

அத்துடன், முதல்வரால் தூதுவருக்கு நினைவுச்சின்னம் ஒன்றும் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது. (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம் 29 கார்த்திகை 2021

**"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்"**

**- தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்காவின் 26 ஆவது ஜனாதிபதி**

கல்வி tv CHANNEL-1

**30.11.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

கல்வி tv CHANNEL - 2

**30.11.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
30.11.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## பேச்சளவிலான அரசியல் ஒற்றுமை!

பலமானதொரு தமிழ் தேசிய அமைப்பாக எழுச்சி பெறுவதற்கு தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஒற்றுமை அவசியமென்று தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்திருக்கின்றார். தமிழ் கட்சிகள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு சித்தார்த்தன் தலைமையேற்க வேண்டுமென்று தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்திருக்கின்றார். ஒற்றுமை அவசியம் என்பதில் எவருக்கும் மாற்று கருத்துக்கள் இல்லை. ஆனால், ஒற்றுமையை எந்த இடத்திலிருந்து ஆரம்பிப்பது - எவ்வாறு ஆரம்பிப்பது என்பதில்தான் தொடர்ந்தும் இழுபறிநிலை காணப்படுகின்றது.

2009இற்கு பின்னரான காலப்பகுதியில் தமிழ்த் தேசிய கட்சிகள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காகப் பல முயற்சிகள் - பல்வேறு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், அனைத்து முயற்சிகளுமே தோல்விடைந்திருக்கின்றன. 2009இல் போர் மௌனிக்கப்பட்டபோது, தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரேயோர் அமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இருந்தது. ஆனால், இன்று பத்து கட்சிகளுக்கு இடையிலான ஒற்றுமை பற்றி பேசுமளவிற்கு தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்கள் பிளவுற்றிருக்கின்றன.

அனைவரும் தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வது உண்மையாயின் பின்னர் எவ்வாறு பிளவுகள் ஏற்படுகின்றன? எனவே, கட்சிகளுக்கு இடையிலான பிளவுகள் - அடிப்படையில் தமிழ்த் தேசிய அரசியல் தொடர்பானதல்ல. ஏனெனில், தமிழ்த் தேசிய இலக்காக அனைவரும் ஒரு விடயத்தையே வலியுறுத்தி வருகின்றனர். தற்போது கட்சிகளாகப் பிளவுற்றிருக்கும் எவருமே தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளில் முரண்படவில்லை. தமிழ் மக்களுக்கான உச்சபட்சமானதோர் அரசியல் தீர்வில் முரண்படவில்லை. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதியைப் பெறுவது தொடர்பில் முரண்படவில்லை. பின்னர் எவ்வாறு ஒற்றுமை மட்டும் தொடர்ந்தும் எட்டாக்கனியாகவே இருக்கின்றது?

விடயங்களை ஆழமாகப் பார்த்தால் அரசியலில் செல்வாக்கு செலுத்தும் சில நபர்களுக்கு இடையிலான முரண்பாடுகளே - கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளாக தலைநீட்டுகின்றது. மக்களின் நலனை முன்னிறுத்தி சிந்தித்தால் இந்த முரண்பாடுகள் தீர்க்க முடியாத பிரச்னைகளல்ல. இன்று தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் அனைவருமே நீண்ட அனுபவங்களைக் கொண்டிருப்பவர்கள். 50 வருடங்களுக்கு மேற்பட்ட அரசியல் வரலாற்றை கொண்டிருப்பவர்கள்கூட இருக்கின்றனர். முன்னாள் விடுதலை இயக்கங்களிலிருந்து ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்திருப்பவர்கள் அனைவருமே 40 வருடங்களுக்கு மேற்பட்ட அரசியல் வரலாற்றை கடந்திருப்பவர்கள்தான்.

இந்த வரலாற்று காலம் இவர்களுக்குப் பல படிப்பினைகளை கற்றுக் கொடுத்திருக்கின்றது. ஒரு காலத்தில் இயக்க மோதல்களில் ஆயுத இயக்கங்கள் தங்களின் ஆற்றலை விரயம் செய்திருந்தன. இதில் பாரபட்சமில்லாமல் அனைத்து இயங்கங்களுமே தங்களின் தோழர்களை இழந்திருக்கின்றனர். ஆனால், அதன் பின்னரும் விடுதலைப் புலிகளும் ஏனைய இயக்கங்களும் ஒரு நேர்கோட்டில் சந்திப்பதற்கான அரசியல் சூழல் உருவாகியிருந்தது. கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன், தன்னை விடுதலைப் புலிகள் அமைப்பு, கொல்லப்பட வேண்டியவர்களின் பட்டியலில் வைத்திருந்ததாக, பாராளுமன்றத்தில் பேசியிருக்கின்றார். அவ்வாறான நிலைமையிருந்த போதும் அவற்றையெல்லாம் தாண்டித்தான், சம்பந்தனும் வன்னியை நோக்கி சென்றிருந்தார்.

எனவே, முரண்பாடுகள், பிளவுகள், மோதல்கள், தவறான புரிதல்கள் - இவைகளை உரியமுறையில் கையாள முடியாமல் போனதன் விளைவுதான் ஈழத் தமிழர் அரசியல் சமூகத்தின் இன்றைய நிலைமைக்குக் காரணம். இப்போதிருக்கும் அரசியல் தலைவர்களுக்கு இவற்றை வேறு ஒருவர் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. இருப்பினும் முன்னோக்கி பயணிப்பதில் தொடர்ந்தும் தமிழ் அரசியல் சமூகம் சறுக்கி வீழ்ந்து கொண்டிருக்கின்றது. ஓர் இடைக்கால - நீண்டகால அரசியல் இலக்கை முன்னிலைப்படுத்தி அனைத்துத் தமிழ்த் தேசிய தரப்புக்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது தவிர்க்கவே முடியாத ஒன்றாகும். இதனை உணர்ந்து செயல்பட்டால், ஒற்றுமை மிகவும் எட்டித் தொடக்கூடிய தூரத்தில்தான் இருக்கின்றது. இதனை தவிர்க்கும் அல்லது தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் தமிழ்த் தேசிய இனம் பின்னுக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

# கடலால் சூழப்பட்ட இலங்கை கடனால் மூழ்கும் அபாயம்!

-அலசுவது இராஜதந்திரி-

*இலங்கை கடலால் சூழப்பட்ட ஓர் அழகிய தேசம் என்றே வர்ணிக்கப்படுவதுண்டு. ஆனால், கடல் சூழ்ந்த இலங்கை வெளிநாடுகளிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்களை மீளச்செலுத்த முடியாது பொருளாதார ரீதியாக மூழ்கும் சூழ்நிலைகளே பலமடைந்து வருகின்றன.*

*இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலவரம் மோசமாக இருப்பதையும் எதிர் வரும் பன்னிரெண்டு மாதங்களில் 772. 6 கோடி டொலர்கள் வெளிநாட்டு கடன் தொகையை இலங்கை திருப்பிச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளது என்று எதிர்க்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. ஆனால், தற்சமயம் 220 கோடி டொலர்கள் மாத்திரமே கையிருப்பிலிருப்பதாகவும் இத்தொகையில் 160 கோடி டொலர்கள் மாத்திரமே பயன்படுத்தக்கூடியதாக இருப்பதாகவும் எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.*

*வெளிநாட்டுக் கடன்கள் தவிர உள்நாட்டு வங்கிகளிடமிருந்து அரசாங்கம் 140 கோடி டொலர் கடன் தொகையைப்பெற்றுள்ளது. இதனை திருப்பிச்செலுத்துவதிலும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள அரசாங்கம் நாட்டில் வங்கிக் கட்டமைப்பையும் ஆட்டம் காண வைக்கும் சூழ்நிலைகளை விரைந்து உருவாக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இலங்கையில் எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து வடக்கு-கிழக்கு யுத்தம் நாட்டின் பொருளாதாரத்துக்கு பலத்த சவால்களை விடுத்திருந்தது. மூன்று தசாப்த காலம் வடக்கு - கிழக்கு யுத்தம் நீடித்தபோது பெருந்தொகையான பணம் யுத்த செலவீனங்களுக்காகவே செலவு செய்யப்பட்டிருந்தது. எனவே, யுத்தம் முடிவுக்கு வந்ததும் நாட்டின் பொருளாதாரம் துரிதமாக முன்னேற்றம் காணும் என்றே தெரிவிக்கப்பட்டது. ஆனால், வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்து 12 வருடங்கள் கடந்த போதிலும் நாட்டின் பொருளாதார நிலையில் எவ்வித ஆரோக்கியமான மாற்றத்தையும் காணமுடியவில்லை.*

*மாறாகக் கையிருப்பில் இருப்பவையும் கரைந்து போகும் நிலையே காணப்படுகின்றது. பொருளாதார நிலவரத்தை பொறுத்த வரை சீனாவை ஆபத்பாந்தவனாக இன்றைய அரசு கருதியிருந்தது.*

*ஆனால், சீனாவின் எண்ணமெல்லாம் இலங்கையை பொருளாதார ரீதியாக தனது பிடியின் கீழ் கொண்டு வருவதாக இருந்தது. இதற்கென பெருந்தொகை பணத்தை சீனா இலங்கைக்கு வாரி இறைத்துள்ளது. இலங்கை வாங்கிய கடனை மீள திருப்பிச்செலுத்துவதில் சிக்கல்கள் இருக்கமுடியும் என்பதனை சீனா நன்கறிந்தே வைத்துள்ளது.*

*எனவே, கத்தியின்றி இரத்தமின்றி பண பலத்தினூடாக தனது பிராந்திய வல்லாதிக்கத்தை முன்னெடுப்பதில் சீனா வெற்றி கண்டுள்ளது. இலங்கைக்கும் அப்பால் சென்று ஆபிரிக்க கண்டம் வரை சீனா தனது பண பலத்தினூடாக பல நாடுகளை தனது பிடியின் கீழ் வைத்துள்ளது.*

*ஓரிரு தினங்களுக்கு முன்னர் வெளியான செய்தியொன்றில் சீனாவிடமிருந்து பெற்ற பெருந்தொகைப் பணத்தை செலுத்த முடியாத காரணத்தினால் ஆபிரிக்க நாடான உகண்டாவின் என்டபே சர்வதேச விமான நிலையத்தை சீனா தன்சப்படுத்தும் சாத்தியக் கூறுகள் பலமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.*

*இத்தகவலின் உண்மைத் தன்மையை உகண்டாவோ அல்லது சீனாவோ இதுவரை உத்தியோகபூர்வமாக ஊர்ஜிதம் செய்யவில்லை. இருந்தபோதிலும் சீனாவிடம் உகண்டா பொருளாதார ரீதியாக பெரிதும் சிக்கிக்கொண்டுள்ளதையே அறிந்து கொள்ள முடிகின்றது.*


*தெற்காசியாவில் குறிப்பாக, சீனாவின் பகைமை நாடான இந்தியாவுக்கு கீழே இலங்கையில் மூன்று ஏக்கர் விஸ்தீரணத்தில் சீனா துறைமுக நகரமொன்றையே கொழும்பில் நிர்மாணித்துள்ளது. இதற்காகக்கூட சீனா பெருந்தொகை நிதியை இலங்கையில் முதலீடு செய்துள்ளதுடன், இலங்கையும் போருக்குப் பின்னரான கட்டுமாணப் பணிகளின் பொருட்டு சீனாவிடமிருந்து பெருமளவு பணத்தை கடனாக பெற்றுள்ளது.*

*ஓர் இராணுவ வல்லரசாக இருந்த சீனா தற்சமயம் ஒரு பிரமிக்கத்தக்க பொருளாதார வல்லரசாக ஆசியாவில் மாற்றங்கண்டுள்ளது. எனவே, சீனாவின் பொருளாதார ரீதியான “வேதாளப்பிடியில்” சிக்கி மீளமுடியாத நிலையிலுள்ள நாடுகளில் ஒன்றாகவே இலங்கையும் விளங்குகின்றது.*

*சீனாவிடமிருந்து மாத்திரமல்ல. சர்வதேச நாணய நிறுவனம் உட்பட பலதரப்பட்ட சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்துகூட இலங்கை பெருந்தொகை பணத்தை கடனாகப்பெற்றுள்ளது. மலரப்போகும் 2022ஆம் ஆண்டு கடந்த இரு வருடங்களாக முழு உலகையுமே பொருளாதார ரீதியாக மிரட்டி வந்த கோவிட்-19 வியாதியிலிருந்து மீட்சிபெற வழியமைக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.*

*ஆனால், இலங்கை புதிய ஆண்டில் ஒரு கடனாளியாக காலடி எடுத்து வைக்கும் என்றே எதிர்பார்க்க முடிகின்றது. அத்துடன், பல சிறந்த வளங்களையும் கொண்டுள்ள கடலால் சூழப்பட்டுள்ள இலங்கை, மீள முடியாத பொருளாதாரச் சுமையால் ஒரு கடனாளியாக மூழகிப்போகும் சூழ்நிலைகள் வலுவடையும் என்றே எதிர்பாக்க முடிகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



நவம்பர் - 30 திங்கட்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை - 14
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : ஏகாதசி




**மேடம்**
மேலதிகாரி ஒருவருடன் இருந்த மோதல்கள் நீங்கும். உங்களின் முயற்சிகளில் இருந்த தடைகள் அனைத்தும் நீங்கும். அலுவலக விஷயத்தில் நிம்மதி உண்டாகும்.

**இடபம்**
நண்பர், உறவினர் வருகையால் வீடு களைகட்டும். குடும்பத்தில் உள்ள ஒருவரின் உடல் ஆரோக்கியம் சீராகும். உறவினர் ஒருவருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

**மிதுனம்**
சுபநிகழ்ச்சி ஒன்றை நடத்தி வைத்து மகிழ்வீர்கள். பங்குச் சந்தை போன்ற விஷயம் மூலம் பணம் வரும். விலகியிருந்த சிலர் வலிய வந்து உங்களுடன் பேசுவார்கள்.

**கடகம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி நீடிக்கும். உடன்பிறந்தோருடன் இருந்த பிரச்னை தீரும். கலகலப்பான சூழலுடன் இன்றைய நாள் தொடங்கி அதே விதமாக முடியும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினர் பற்றிய மனக்குறை நீங்கி நிம்மதி அடைவீர்கள். மனதுக்கு பிரியமானவர்கள் உங்களை தொடர்பு கொள்வார்கள். குழந்தைகளின் நலனில் முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி**
சிலருக்கு வியாபாரத்தை விரிவாக்கம் செய்யும் எண்ணம் மேலோங்கும். பணி பற்றிய முயற்சி ஒன்றில் நல்ல வெற்றி கிடைக்கும். பணியிடத்தில் எதிர்பாலினத்தாரால் ஏற்பட்ட பிரச்னை அகலும்.

**துலாம்**
பிரச்னை ஒன்று தீரும். உறவினர் வீட்டில் சுப நிகழ்ச்சி நடக்கும். குடும்பத்தில் ஏற்படும் கலகலப்பான சூழல் உங்களை மகிழ்விக்கும். விரும்பிய விஷயத்தை சிறு தடைக்குப் பின் முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
உங்களின் மனதிற்கு பிடித்தமான நல்ல விஷயம் நடைபெறும். பல நாட்களக எதிர்பார்த்த மாற்றம் ஒன்று இன்று ஏற்படும். உங்களின் தேவை ஒன்று நிறைவேறும். எதிர்க் கருத்துடையோர் மாறுவர்.

**தனுசு**
பணியில் அக்கறை தேவை. கர்வமற்ற செயல் நன்மை தரும். வீண் விரயங்கள் குறைய விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டும். பெரியவர்கள், மேலதிகாரியிடம் பக்குவமாக பேச வேண்டும்.

**மகரம்**
பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரம் சீராகும். மேலதிகாரியின் செயல் ஒன்றால் உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும். உங்களின் நீண்ட நாள் முயற்சி ஒன்று வெற்றி பெறும்.

**கும்பம்**
உங்களது நிதி, பணி வளர்ச்சிக்கு நண்பர்கள் உதவி செய்வர். இன்று பணியில் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம். மற்றவர்களை விமர்சித்தால் பிரச்னைகள் ஏற்படக்கூடும்.

**மீனம்**
மறதியால் சிரமம் ஏற்படக்கூடும். புதிய விஷயத்தை கற்பீர்கள். மேலதிகாரி உங்களை புரிந்து கொள்வார். வீட்டுக் கவலை தீரும். பல காலம் பட்ட பாட்டுக்கு இன்று நல்ல பலன் கிடைத்து மகிழ்வீர்கள்.

# விடுதலை செய்யக்கோரி நளினி வழக்கு சென்னை உயர் நீதிமன்றில் ஒத்திவைப்பு



சென்னை, நவ. 30

ராஜீவ் கொலை வழக்கில் எழுவர் விடுதலை தொடர்பான தீர்மானத்துக்கு ஆளுநரின் ஒப்புதலுக்கு காத்திருக்காமல் தன்னை விடுதலை செய்யக் கோரி நளினி தாக்கல் செய்த வழக்கின் விசாரணையை சென்னை உயர் நீதிமன்றம், மூன்று வாரங்களுக்கு நேற்று ஒத்திவைத்துள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் கைதிகளாக உள்ள நளினி, முருகன் உள்பட ஏழு பேரையும் விடுதலை செய்ய 2018 செப்டம்பர் 9ஆம் தேதி தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி, 2018 செப்ரெம்பர் 11ஆம் திகதி ஆளுனர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதன் மீது ஆளுநர் எந்த முடிவும் எடுக்காததால், தீர்மானம் நிறைவேற்றிய மறுநாள் முதல் தன்னை சட்டவிரோதமாக சிறையில் அடைத்து வைத்திருப்பதாகவும், தன்னை விடுதலை செய்ய வேண்டுமெனவும் கூறி நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

உச்ச நீதிமன்றம் அளித்த பல்வேறு தீர்ப்புகளின்படி, நளினியின் மனு ஏற்றுக் கொள்ளத்தக்க தல்ல என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, "ஆளுநரின் செயல்பாடு உச்ச நீதிமன்ற அவமதிப்பு செயல் எனவும், ஆளுநர் ஒப்புதல் இல்லாமலும் தண்டனைக் குறைப்பு வழங்கலாம் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளதாகவும் நளினி தரப்பில் சுட்டிக் காட்டி வாதிடப்பட்டது. தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம், இதே வழக்கில் ஆயுள் தண்டனை கைதியாக உள்ள பேரறிவாளன் தாக்கல் செய்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் டிசெம்பர் 7ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது" என்றார்.

இதையடுத்து, உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கு தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்ய நளினி தரப்புக்கு அறிவுறுத்திய நீதிபதிகள், கூடுதல் பதில்மனுவை தாக்கல் செய்ய அரசுக்கு உத்தரவிட்டு, விசாரணையை மூன்று வாரங்களுக்கு ஒத்திவைத்ததனர்.

# ஹிந்தியை திணிக்க முயன்றால் இந்தியா பல நாடுகளாக சிதறும்

## அனைத்து கட்சி கூட்டத்தில் வைகோ எச்சரிக்கை



சென்னை, நவ. 30

ஹிந்தியைத் திணிக்க முயன்றால், இந்தியா பல நாடுகளாகச் சிதறி விடும். கூட்டு ஆட்சித் தத்துவத்தை ஒழிக்க முனைகின்ற அரசு, காணாமல் போய் விடும் என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தின் குளிர் காலக் கூட்டத் தொடர், தொடர்பான அனைத்துக் கட்சிக் கூட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்ற வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமை வகித்தார். அமைச்சர்கள் பிரகாலாத் ஜோஷி, பியுஷ் கோயல் முன்னிலை வகித்தனர். அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர். இக் கூட்டத்தில், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கலந்து கொண்டார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:-

"இந்தியா ஒரு கூட்டு ஆட்சி நாடு. ஆனால், கூட்டு ஆட்சித் தத்துவத்தையே தகர்த்துத் தரைமட்டம் ஆக்க, நரேந்திர மோடி அரசு திட்டமிட்டு வேலை செய்கின்றது. ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே கலாசாரம் என்று, ஒரு சர்வாதிகார நாடு ஆக்கத் துணிந்து விட்டார்கள்.

தமிழ்நாட்டில் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் எரிமலையாக வெடித்தது. எனவே, சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர், இணையற்ற ஜனநாயகவாதி, ஜவகர்லால் நேரு, மக்கள் விரும்புகின்றவரை, இந்தியுடன் ஆங்கிலமும் ஆட்சி மொழியாக நீடிக்கும் என உறுதிமொழி கொடுத்தார்.

ஆனால், சில நாள்களுக்கு முன்னர், உள்துறை அமைச்சர் அமித் ஷா, இந்தியாவுக்கு ஒரே மொழி இந்திதான் உள்துறை அமைச்சகத்தின் கோப்புகள் முழுமையும் இப்போது இந்தியில்தான் எழுதுகின்றோம் என்று, அதிகாரத் திமிரோடு கூறி இருக்கின்றார்.

அப்படித் திணிக்க முயன்றால், இந்தியா பல நாடுகளாகச் சிதறி விடும் என எச்சரிக்கின்றேன். இந்த அக்கினிப் பரீட்சையில், கூட்டு ஆட்சித் தத்துவத்தையே ஒழிக்க முனைகின்ற இந்த அரசு, காணாமல் போய்விடும்" என வைகோ தெரிவித்தார்.

# ஜெயலலிதா பெயரை இருட்டடிப்பு செய்வதா? தி.மு.க. அரசு மீது டி.டி.வி.தினகரன் கண்டனம்



சென்னை, நவ. 30

மக்கள் நலத்திட்டங்களில் உள்ள மறைந்த முதல்வர் ஜெயலலிதா பெயரை தி.மு.க. அரசு சத்தமில்லாமல் இருட்டடிப்பு செய்யும் வேலைகளை செய்வது கண்டனத்திற்குரியது என அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது ருவற்றர் பக்கத்தில் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

"மக்கள் நலத்திட்டங்களில் உள்ள மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் பெயரை இருட்டடிப்பு செய்யும் வேலைகளை சத்தமில்லாமல் தி.மு.க அரசு மேற்கொண்டு வருவது கடும் கண்டனத்திற்குரியது. ஏழை,எளிய மக்கள் பசியாறுவதற்காக ஜெயலலிதா கொண்டுவந்த அம்மா உணவகங்களை சீர்குலைப்பதற்கான வேலைகளை ஏற்கெனவே தொடங்கி விட்ட திமுக அரசு, அவற்றை மொத்தமாக மூடுவதற்கு திட்டமிட்டு கருணாநிதி பெயரில் உணவகங்களை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

ஒரு பக்கம் "ரொம்பவும்" அரசியல் நாகரிகம் வாய்ந்தவராக தன்னை காட்டிக் கொள்ள, "அம்மா உணவகங்கள் தொடர்ந்து செயல்படும்" என முதலமைச்சர் ஸ்டாலின் கூறுகிறார். ஆனால், அவரின் அரசு அதற்கு நேர் எதிராக செயல்படுகிறது.

இப்போது "அம்மா மினி கிளினிக்"கையும் பெயர் மாற்றம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த காழ்ப்புணர்ச்சி நடவடிக்கைகளை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை தி.மு.க.வும் ஸ்டாலினும் மறந்துவிடக் கூடாது" என டி.டி.வி.தினகரன் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் ஒமைக்ரோனை தடுக்க முன்னெச்சரிக்கை அவசியம்!

## சுகாதார தரப்பினர் வலியுறுத்து

கொழும்பு, நவ. 30

**புதிதாக கண்டறியப்பட்ட ஒமைக்ரோன் கோவிட் உருதிரிபு வைரஸ் தொடர்பாக விழிப்பு டன் இருப்பதுடன், அது நாட்டுக்குள் பரவுவதைத் தடுக்கும் வகையிலான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக் குமாறு இலங்கை சுகாதார அதிகாரிகள் அரசாங்கத்தை வலியு றுத்தியுள்ளனர்.**

புதிய கவலைக்குரிய உரு திரிபு நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க தேவையான நடவடிக் கைகளை எடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஆபத்தானதாகக் கருதப் படும் புதிய ஒமைக்ரோன் உரு திரிபு இலங்கைக்குள் நுழை யாது என்பதற்கு எந்த உத்தர வாதமும் இல்லை என இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் கலாநிதி பத்மா குண ரத்ன தெரிவித்தார்.

சுகாதார வழிகாட்டுதல் களை கண்டிப்பாக கடைப் பிடிப்பதும் சரியான நேரத்தில் தடுப்பூசிகளைப் போடுவதும் தற்போதுள்ள சிறந்த முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளாகும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, புதிய ஒமைக் ரோன் உரு திரிபு இலங்கைக் குள் நுழையக்கூடிய பல ஓட் டைகள் இருப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

விமான நிலையத்தில் அமுல் படுத்தப்பட்டுள்ள கோவிட் கண்காணிப்பு மற்றும் தடுப்பு முறைமை பலவீனமானது. நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அதிகாரிகளிடம் இருந்து எளிதில் தப்பிச் செல்ல முடியும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். நாட்டுக்குள் வரும் சுற்றுலாப் பயணிகள் சோதனை களைத் தவிர்க்க அதிகாரிகாரிக ளிடம் இருந்து தப்பிக்க முடி யாமல் பார்த்துக் கொள்வதும் அவசியமானது என உபுல் ரோஹண வலியுறுத்தினார்.(அ)

## தடை செய்யப்பட்ட நாடுகளிலிருந்து இரு வாரங்களாக எவரும் வரவில்லை

கொழும்பு, நவ. 30

புதிதாகக் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் கொரோனா மாறு பாட்டின் அச்சுறுத்தல் காரணமாக, நாட்டுக்குள் பிர வேசிக்கத் தடை விதிக்கப்பட்ட ஆறு தென்னாபிரிக்க நாடுக ளின் சுற்றுலாப் பயணிகள், கடந்த 14 நாட்களாக நாட் டுக்கு வரவில்லை என, சுற்று லாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தென்னாபிரிக்கா, நமீபியா, பொட்ஸ்வானா, சிம்பாப்வே, லெசோதோ மற்றும் சுவாசி லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகள், கடந்த 14 நாட்களாக நாட்டுக்கு வர வில்லை என்றும், ஒமிக்ரோன் மாறுபாடு காரணமாக, நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் நாட்டுக்குள் நுழைய அவர்க ளுக்குத் தடை விதிக்கப்பட்டுள் ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 14 நாட்களில் இந்த நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் தவிர வேறு எவரும் நாட்டுக்கு வந்துள்ளார்களா என்பது குறித்து உரிய திணைக் களங்கள் ஆராயும் எனவும் அதற்கேற்ப சுகாதாரத்துறை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

தடை செய்யப்பட்ட 6 நாடு களைத் தவிர மற்ற நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு எந்தத் தடையும் இல்லை என்றும் விஸா வழங்கும்போது மேற்குறிப் பிட்ட பயணிகள் சம்பந்தப் பட்ட நாடுகளுக்குச் சென்றிருக் கிறார்களா என்பதை அதிகாரி கள் பரிசோதிப்பார்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)



## யாழ். கோட்டைக்கு அண்மையில் கிறிஸ்தவ ஆலயம் மீது தாக்குதல்!

### ஒருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணம் கோட்டைக்கு அண்மையில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் மீது நேற்று அதிகாலை 3:30 மணி யளவில் தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது.

பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் உள்ள குறித்த தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து அவ் விடத்துக்கு விரைந்த பொலி ஸார் விசாரணை நடத்திய தோடு குறித்த தாக்குதலை நடத்திய கொட்டடிப் பகுதி யைச் சேர்ந்த ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் மதுபோதையில் இருந்ததாக வும் பொலிஸார் கூறினர்.

தாக்குதலின் பிண்ணனி தொடர்பாக மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டுள் ளனர். (அ-03)

## தாக்குதலாளி மனநோயாளி!




யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணம் கோட்டை தேவாலயம் மீதான தாக்குதல் வேண்டுமென்று செய்யப்பட்ட விடயமல்ல. ஒரு மனநோயாளி யால் மேற்கொள்ளப்பட்டதே என நாவாந்துறை பங்குத் தந்தை அருட்தந்தை ம. யேசுரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை யாழ்ப் பாணம் கோட்டைக்கு அருகி லுள்ள கிறிஸ்தவ தேவாலயச் சொரூபங்கள் உடைக்கப்பட் டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

புனித அந்தோனியார் சிற் றாலயம் நேற்றிரவு(நேற்று முன் தினம்) மனநலம் பாதிக்கப் பட்ட ஒருவரால் சொரூபங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

குறித்த செயலை செய்தவர் ஏற்கனவே எமக்கு அறிமுகமா னவர். அவர் ஒரு மனநோயாளி. நீண்ட காலமாக இந்த ஆலயத் திலேயே தங்கியுள்ளார். நாங் கள் பலமுறை அவரை வெளி யேற்ற பார்த்தோம். ஆனால், அவர் போகவில்லை.

இது வேண்டுமென்று செய் யப்பட்ட ஒரு விடயம் அல்ல. ஒரு மனநோயாளியால் மேற் கொள்ளப்பட்ட விடயமாகும்.

அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பின்னர் எனக்கு அறிவித்திருந்தார்கள் நான் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு பதிவு செய்துள் ளேன். அதன் தொடர்ச்சியான நடவடிக்கையைபொலிஸார் எடுப்பார்கள்-என்றார். (அ-03)

## இடைநிறுத்தப்பட்ட ரயில் சேவைகள் மீளவும் ஆரம்பம்!

கொழும்பு, நவ. 30

கொழும்பு-மட்டக்களப்பு ரயில் சேவை மீண்டும் வழ மைக்கு திரும்பியுள்ளது.

புணானை-வெலிகந்தவுக்கு இடையிலான ரயில் மார்க் கத்தின் திருத்தப்பணிகள் காரண மாக கடந்த 27 ஆம் திகதி முதல் குறித்த மார்க்கத் தின் சேவைகள் தற்காலிக மாக இடைநிறுத்தப் பட்டி ருந்தமை குறிப்பிடத் தக்கது.

இந்நிலையில், மட்டக் களப்பு நோக்கிய மீனகயா கடு கதி ரயில் கொழும்பு கோட்டையிலிருந்து நேற்று முந்தினம் இரவு 7 மணிக்கு புறப்பட்டதாக ரயில் திணைக்களம் தெரி வித்துள் ளது.

# மோசடிகள் குறித்து திடுக்கிடும் தகவல்களை வெளியிட தயாராகிறார் துஷான் குணவர்த்தன!

கொழும்பு, நவ. 30

வெள்ளைப் பூண்டு மோசடி மற்றும் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு விவகாரம் சூடுபிடித் துள்ள நிலையில் அரசியல்வாதி களின் ஊழல் மோசடிகள் தொடர்பான மேலும் பல திடுக் கிடும் தகவல்களை வெளியிட நுகர்வோர் பாதுகாப்பு அதி கார சபையின் முன்னாள் பணிப் பாளர் நாயகம் துஷான் குண வர்த்தன தயாராகி வருகிறார்.

பல அமைச்சுக்களில் இடம் பெற்ற சட்டவிரோதச் செயல் பாடுகள் காரணமாகவே நுகர் வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பதவியில் இருந்து தான் விலகி யதாக துஷான் குணவர்த்தன குறிப்பிட்டார்.

பதவி விலகி வெளியே வரு வதன் மூலம் அரச நிறுவனங்க ளில் நடைபெறும் சட்டவிரோத செயல்களை அம்பலப்படுத்த முடியும். இதன் மூலம் பொது மக்களுக்கு மேலும் பலவற்றைச் செய்ய முடியும் என தான் உணர்ந்தார் என அவர் கூறி னார்.

சரியான நேரத்தில் ஊழல்- மோசடிகள் குறித்த மேலும் பல தகவல்களை நான் வெளியிடு வேன். அந்த அனைத்து தகவல் களையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கும் சமர்ப்பிக் கவுள்ளேன் எனவும் துஷான் குணவர்த்தன தெரிவித்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஓர் அமைச்சரின் அரசியல் பணிக ளுக்காக பொது நிதியை விடு விக்குமாறு அமைச்சு ஒன்று கோரியதாகவும், அதற்கு உடன் படத் தான் மறுத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் கொள் கையை நடைமுறைப்படுத்தவே நான் பதவிக்கு வந்தேன். எந்த வோர் அமைச்சருக்கும் தனிப் பட்ட ரீதியில் சேவகம் செய்ய நான் பதவிக்கு வரவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இரண்டு வெள்ளை பூண்டு கொள்கலன்கள் சட்டவிரோ தமாக வெளியேற்றப்பட்டமை உட்பட பல அதிர்ச்சிச் சம்ப வங்களை துஷான் குணவர்த்தன வெளிப்படுத்தினார்.

இதன் பின்னணியில் தனக்கு அரசியல் ரீதியாக அழுத்தம் கொடுக்கப்பட்டதாக தெரி வித்து, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பதவியில் இருந்து அவர் விலகினார்.

அத்துடன், உள்நாட்டு எரி வாயு சிலிண்டர்களில் நுகர் வோரை ஏமாற்றும் வகையில் செய்யப்படும் கலவை மாற்ற மோசடி குறித்தும் அவர் அண்மையில் பரபரப்பு தகவல்களை வெளியிட்டார்.

எரிவாயு சிலிண்டர்களில் செய்யப்படும் கலவை மாற்ற மோசடியால் அவை வெடித்துச் சிதறும் அபாயம் உள்ளதாகவும் இதனால் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து உள்ளதா கவும் அவர் எச்சரித்திருந்த மையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உலகை மிரட்டும் 'ஒமைக்ரோன்' அவசர நடவடிக்கை வேண்டும்

## சபையில் சஜித் வலியுறுத்து




**கொழும்பு, நவ. 30**

**உலகை தற்போது அச்சுறுத்திவரும் 'ஒமைக்ரோன்' என்ற புதிய வகை கொரோனா வைரஸ் தொடர்பில் அரசு கூடுதல் கவனம் செலுத்தி, முன்னேற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் _ என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்த அவர்,

"டெல்டாவைவிட ஆபத்தாக் கருதக்கூடிய ஒமைக்ரோன் பிறழ்வு எமது நாட்டுக்குள் பரவும் அபாயமும் இருக்கின்றது.

எனவே, இதனை தடுப்பதற்கு சுகாதார தரப்பினரால் முன் வைக்கப்பட்டுள்ள யோசனைகளை அரசு நிறைவேற்ற வேண்டும்.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் இரண்டு தடுப்பூசிகள் மற்றும் பூஸ்டர் டோஸ்களை ஏற்றியிருந்தாலும் அவர்கள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

எமது நாட்டிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும். அதற்கான பணி தற்போது ஆரம்பமாகியுள்ளமை வரவேற்கக்கூடிய விடயம். அதேபோல 60 வயதுக்கும் குறைவானவர்களுள் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பூஸ்டர் டோஸ் வழங்க வேண்டும் -என்றார். (அ)

## 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு!

கொழும்பு, நவ. 30

சீரற்ற காலநிலை தொடர்ந்து வரும் நிலையில் நாட்டின் 8 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நுவரெலியா, கொழும்பு, களுத்துறை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கையே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

# பஞ்சத்தின் விளிம்பில் நாடு!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 30

எதிர்காலத்தில் நாட்டில் பஞ்சம் ஏற்படும் நிலையை தற்போதைய அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

பாணந்துறையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



அரசாங்கத்தின் இந்த முட்டாள்தனமான முடிவுகளால் மக்களுக்கு தேவையான உரங்கள் உரிய நேரத்தில் வழங்கப்படவில்லை. இப்போது மரக்கறிகளின் விலை வரலாற்றில் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

இந்த நாட்டை அரசாங்கம் பஞ்ச நிலைக்கு கொண்டு வந்துள்ளது. அரிசி வர்த்தமானியை மீளப்பெற்றது. சீனி வர்த்தமானியை மீறப் பெற்றது. இன்று உரம் வர்த்தமானியை மீளப் பெற்றுள்ளது. நெல் அறுவடை குறைக்கப்பட்டு, இந்த அரசாங்கம் இந்த நாட்டை பஞ்சத்தின் நிலைக்கு கொண்டு வந்துள்ளது. மரக்கறி உற்பத்தி குறைந்துள்ளது- என்றார். (அ)

# 'ஒமைக்ரோன்' பிறழ்வு குறித்து இலங்கை கழுகுப் பார்வை!



கொழும்பு, நவ. 30

'ஒமிக்ரோன்' வைரஸ் இலங்கைக்குள் வருவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். "விமான நிலையங்களில் பி.சி.ஆர் பரிசோதனைகள் உட்பட சுகாதார நடைமுறைகள் உரிய வகையில் இடம்பெறும். அதேபோல ஒமைக்ரோன் பிறழ்வு பரவும் 6 நாடுகளுக்கு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, எமது நாட்டுக்குள் வைரஸ் இந்த பரவாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் நாமல் குறிப்பிட்டார். (அ)

## எரிவாயு சிலிண்டர் விவகாரத்தில் அரசின் அணுகுமுறையில் தவறு!

### இராஜாங்க அமைச்சர் விதுர

கொழும்பு, நவ. 30

பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் அரசாங்கத்தின் தரப்பில் பாரிய பிரச்னை காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் எரிவாயு சிலிண்டர் வெடிப்புகள் தொடர்பான விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் விக்கிரமநாயக்க, சம்பவங்கள் தொடர்பில் முதலில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் தெளிவான அறிவிப்பை வெளியிட வேண்டும் என்றார்.

பல்வேறு அறிக்கைகளை வெளியிடுவதனால் மாத்திரம் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்காது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படாமல் பொதுமக்களை திசை திருப்பும் வகையில் அறிக்கைகள் வெளியிடப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் கூறினார்.

"எல்.பி எரிவாயு சிலிண்டர்கள் சமூகத்தின் ஒரு அங்கமாகிவிட்டதால், இந்தப் பிரச்னைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டும்.

அண்மைய நிகழ்வுகளால் மக்கள் தற்போது அச்சமடைந்துள்ளனர்.

அரசு பொறுப்பேற்று உரிய முடிவுகளை எடுக்கவேண்டும். உரம் தொடர்பாகவும் இதேபோன்றதொரு பிரச்னை இடம்பெற்றது.

இவ்விடயம் தொடர்பில் தெளிவான அறிக்கையை வெளியிடவேண்டும்"-என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# சிலிண்டர் வெடிப்பு பிரச்னைக்கு இந்த வாரத்துக்குள் தீர்வு நிச்சயம்

## பாராளுமன்றத்தில் அரசு அறிவிப்பு

கொழும்பு, நவ. 30

எரிவாயு தொடர்பிலான பரிசோதனைகளுக்கு எமது நாட்டில் சிறந்த இரசாயன ஆய்வுக்கூடமொன்று இல்லை என்றும் இந்த வாரத்துக்குள் சமையல் எரிவாயு வெடிப்புச் சம்பவங்களுக்கு தீர்வு கொடுக்கப்படுமென்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்-

சமையல் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் இன்று நேற்று நடந்தது கிடையாது. நீண்ட நாட்களாக இருந்துவரும் பிரச்னை. ஆனால் நாட்டில்



தற்போது நாட்டில் தற்போது இடம்பெறும் வெடிப்பு சம்பவங்கள்வழமைக்கு மாறானவையாகும்.

1960 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை எமது எரிவாயு தொடர்பில் பரிசோதனை செய்ய நாட்டில் சட்டபூர்வமான இராசயன ஆய்வுக்கூடமொன்று இல்லை. இதுவே உண்மையான நிலைமை.

இது தொடர்பில் கடந்த வாரம் ஆய்வு செய்திருந்தோம். அந்த ஆய்வுகளின் முதல் முடிவு கடந்த சனிக்கிழமை வெளியானது. அதனை மொரட்டுவை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைத்திருந்தோம். ஒரு அறிக்கையை வைத்து இது தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியாது என்று அந்த பல்கலைக்கழகம் அறிவித்திருந்தது.

அதன் பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இரத்தினபுரி, குருநாகல், கம்பஹா, காலி, களுத்துறை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் 12 மாதிரிகளை பெற்றுக் கொண்டு பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பி வைத்துள்ளோம். அநேகமாக அந்த அறிக்கை இன்று கிடைக்கலாம்.

அந்த அறிக்கையை மொரட்டுவை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கவுள்ளோம். இந்த வாரத்துக்குள் இந்த பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். இதற்கு வழங்கவேண்டிய தற்காலிக தீர்வு, குறுங்கால தீர்வு, நீண்டநாள் தீர்வு என்பவற்றுக்கான ஆலோசனைகளை மொறட்டுவை பல்கலைக்கழகம் பெற்றுக்கொடுக்கும்- என்றார். (அ)

## எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறங்கும் தஹாம் சிறிசேன

கொழும்பு, நவ. 30

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாம் வேட்பாளராக போட்டியிடவுள்ளாரென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

தஹாம் சிறிசேன தற்போது பொலனறுவை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணி தலைவராக உள்ளார். (அ)

# புதிய வைரஸ் பிறழ்வால் இலங்கை முடக்கப்படுமா?

கொழும்பு, நவ. 30

'புதிய வகையான கொரோனா வைரஸ் பிறழ்வு பரவும் நிலையில், நாட்டை முடக்குவது தொடர்பில் இன்னும் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.' - என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

'நாட்டை மூடுவதற்கான பரிந்துரை சுகாதார தரப்புகளால் முன்வைக்கப்படவில்லை. அதற்கான தேவை தற்போது எழவில்லை. அவ்வாறு செய்வதற்கும் எதிர்ப்பார்க்கவில்லை.

எனவே, பொது முடக்கம் என்ற நிலைக்கு நாடு செல்லாமல் இருக்கும் வகையில் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும்.' - என்றும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.



# பாவனைக்குதவாத 45,000 கிலோ உருளைக்கிழங்கு கண்டுபிடிப்பு

கொழும்பு, நவ. 30

பாவனைக்குதவாத 45,000 கிலோ உருளைக்கிழங்கு தம்புள்ளை களஞ்சியசாலை ஒன்றிலிருந்து தம்புள்ளை மாநகர சபை முதல்வர் ஜாலிய ஓபாதவினால் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த கிழங்குகள் சுத்தம் செய்யப்பட்டு ஹோட்டல்களுக்கு வழங்கப்படுவதாக கிடைத்த தகவலுக்கமையவே சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்த கிழங்கு சுத்தம் செய்யப்பட்டு நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக மாநகரசபை முதல்வர் தெரிவித்தார். (அ)



# மாத்தளை மாநகர முதல்வர் குழு யாழ். பொதுநூலகத்துக்கு விஜயம்

யாழ்ப்பாணம், நவ. 30

மாத்தளை மாநகர முதல்வர் சந்தனம் பிரகாஸ் தலைமையிலான சபையின் உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் பிரதான நூலகம், கலாசார மண்டபம் ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

யாழ். மாநகர சபையின் செயல்பாடுகள் தொடர்பில் நேரில் பார்வையிட்டு அறிந்து கொள்ளும் வகையிலேயே மாத்தளை மாநகர சபை முதல்வரும் உறுப்பினர்களும் யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

இவ்வாறு வருகை தந்த மாத்தளை மாநகர சபையின் 20 உறுப்பினர்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பிரதான நூலகம் மற்றும் கலாசார மண்டபங்களைப் பார்வையிட்டதோடு தற்போது புதிதாக அமைக்கப்படும நகர மண்டபத்தையும் பார்வையிட்டனர்.

இதன்போது யாழ்.மாநகர சபையின் முதல்வர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் இதில் பங்கேற்றனர். (அ)




# மாதகலில் கடற்படைக்கு காணி சுவீகரிப்பு; மக்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது!

யாழ்ப்பாணம், நவ. 30

**சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாதகல் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் இடம்பெறவிருந்த காணி சுவீகரிப்பு நடவடிக்கை பொதுமக்கள் மற்றும் அரசியல் வாதிகளின் பலத்த எதிர்ப்பினால் நேற்று கைவிடப்பட்டது.**

மாதகல் கிழக்கு ஜே /150 கிராம அலுவலர் பிரிவில் மூன்று பரப்புக் காணியை சுவீகரிப்பதற்கான அளவீட்டுப் பணிக்காக வந்த நில அளவைத் திணைக்களத்தினரை தடுத்து நிறுத்திப் பொதுமக்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது 'நமது இந்த காணிகளில் கடல் அரிப்பு ஏற்பட்டபோது இந்த காணியை பாதுகாக்க நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? எங்கள் வாழ்வாதாரத்தை முடக்கும் வகையில் இவ்வாறு கடற்தொழில்ரீதியான காணிகளை அளவீடு செய்வதை நிறுத்துங்கள்' எனவும் பொதுமக்களால் கோஷம் எழுப்பப்பட்டது.

மேலும் பிரதேச செயலகத்தில் நடந்த கூட்டத்தில், அந்தக் காணியை அளவீடு செய்வதில்லை என முடிவை எடுத்துவிட்டு இவ்வாறு காணி அளவீடு மேற்கொள்வது தவறு எனக் கூறப்பட்ட நிலையில் காணி அளவீட்டுப் பணி கைவிடப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினரான சி.சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ. சரவணபவன், மாவை சேனாதிராசா, வலி தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன், வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன், மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது போராட்டத்தில் பங்கு கொண்டவர்களை மிரட்டும் விதத்தில் கடற்படையினர் ஒளிப்படம் எடுத்தோடு வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர். (அ-03)

# ஹற்றனிலும் சிலிண்டர் வெடிப்பு

கொழும்பு, நவ. 30

ஹற்றன்- கொழும்பு பிரதான வீதியில் புருட்ஹில் பகுதியில் இயங்கும் ஹோட்டலொன்றில் நேற்றுக் காலை சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்ததாக அதன் பணியாளர்கள் தெரிவித்தனர்.

நேற்று காலை சமையல் எரிவாயு அடுப்பை பற்றவைத்து ஒரு மணித்தியாலத்தின் பின்னர், சமையல் எரிவாயு சிலிண்டர் மற்றும் அடுப்பை இணைக்கும் குழாய் வெடித்து சிதறியதாக அவர்கள் கூறினர்.

எனினும், இதன்போது எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

# காவத்தை தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஆசிரிய மாணவரின் பொருள்கள் கொள்ளை

கொழும்பு, நவ. 30

கொரோனா தனிமைப்படுத்தல் நிலையமாக கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டு வந்த காவத்தை கல்வியியற் கல்லூரியில் தனிமைப்படுத் தப்பட்டிருந்தவர்களால் இந்த விடுதிக்குரிய ஆசிரிய மாணவர்களின் அலுமாரிகள் உடைக்கப்பட்டு அவற்றில் இருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக கல்விக் கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் 12 ஆம் திகதி இந்தக் கல்விக் கல்லூரியின் தனிமைப்படுத்தல் பணிகள் முடிவடைந்து இக்கட்டடங்கள் கல்வியியல் கல்லூரி நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் பின் இந்த விடுதிகளில் தங்கியிருந்த ஆசிரிய மாணவர்கள் விடுதிக்கு வருகை தந்தபோது தமது பொருட்கள் வைக்கப்பட்டிருந்த அலுமாரிகள் உடைக்கப்பட்டு அவற்றிலிருந்த பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக நிர்வாகத்தினரிடம் தெரிவித்தனர்.

இதனையடுத்து மாணவர்கள் வழங்கிய தகவலையடுத்து திருட்டுப்போன பொருட்களின் பட்டியல் ஒன்றை கல்வியியற் கல்லூரி நிர்வாகம் தயாரித்துள்ளது.

தமது காணாமல்போன பொருட்களுக்கு மாணவர்கள் நட்டஈடு கேட்பதாகவும் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இந்தக் கட்டடங்களில் கொரோனாவினால் பாதிக்கப்பட்ட சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் யாசகர்களும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாக கல்வியியல் கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற சிவபூமி பாடசாலை கௌரவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 30

தேசிய மட்டத் தில் விசேட தேவையுடையோருக்கான சிறந்த பாடசாலைகளில் முதலாம் இடத்தைப் பெற்ற கோண்டாவில் சிவ பூமி மனவிருத்தி பாடசாலையை கௌரவிக் கும் விசேட நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது.

தேசிய மட்டத்தில் விசேட தேவையுடையோருக்கான பாடசாலைகளில் முதலாம் இடத்தை நிலைநாட்டி கோண் டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை விருதை கடந்த வியாழக்கிழமை பெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், சிவபூமி பாடசாலை அதிபர் கலைவாணி குகதாஸன், ரிஷி தொண்டுநாத சுவாமிகள், நல்லூர் பிரதேச செயலர், பிரதேச செயலக கலாசார உத்தியோகத் தர்கள், மாண வர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-03)

**சீனாவுடன் நெருக்கமாகச் செல்வதற்கு இலங்கை தீர்மானித்தமைக்கு இரு காரணங்கள் இருந்தன. முதலாவது: பொருளாதார ரீதியாக பாதாளத்தில் வீழ்ந்துள்ள இலங்கைக்கு சீனாவின் நிதி உதவி தேவையாக இருந்தது. இரண்டாவது: ஜெனிவா போன்ற சர்வதேச அரங்குகளில் மேற்கு நாடுகளால் இலங்கைக்கு வரக்கூடிய நெருக்கடிகளிலிருந்து தப்பிப்பிதற்கு சீனாவை இலங்கை நம்பியது.**

# பஸிலின் புதுடில்லிக்கான விஜயம் புதிய திருப்பத்தை ஏற்படுத்துமா?



**அகிலன்**

கடந்த ஒரு தசாப்த காலமாக சீனாவுடன் நெருங்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை, தற்போது அவ்விடயத்தில் தளம்புவது தெரிகின்றது. சீனாவிலிருந்து பெறப்பட்ட சேதன பசளை விவகாரத்தில் பீஜிங்கின் அணுகுமுறைதான் இதற்கு உடனடிக் காரணமாக சொல்லப்பட்டாலும், மேற்குலகின் அழுத்தங்களும் இதன் பின்னணியில் இருந்துள்ளன. சீனாவுக்குப் பதிலாக இந்தியாவுடன் நெருக்கமாகச் செல்வதற்கு இலங்கை முற்படுவதாகவும் தெரிகின்றது.

சேதன பசளைக் கப்பல் விவகாரத்தில் சீனாவின் கடும்போக்கான அணுகுமுறை நட்பு நாடு ஒன்று நடந்துகொள்வதைப்போனறதாக இருக்கவில்லை. கொழும்புக்கு இது ஓர் எச்சரிக்கையைக் கொடுத்திருக்கும் நிலையில்தான் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அவசரமாக புதுடில்லிக்குப் பறக்கவிருக்கின்றார். டில்லியும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி காய்களை நகர்த்துகின்றது. இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வைக் கொடுத்தால், சீனாவின் ஆதிக்கத்திலிருந்து அதனை மீட்க முடியும் என புதுடில்லி சிந்திப்பதாகத் தெரிகின்றது.

சீனாவுடன் நெருக்கமாகச் செல்வதற்கு இலங்கை தீர்மானித்தமைக்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது: பொருளாதார ரீதியாக பாதாளத்தில் வீழ்ந்துள்ள இலங்கைக்கு சீனாவின் நிதி உதவி தேவையாக இருந்தது. இரண்டாவது: ஜெனிவா போன்ற சர்வதேச அரங்குகளில் மேற்கு நாடுகளால் இலங்கைக்கு வரக்கூடிய நெருக்கடிகளிலிருந்து தப்பிப்பிதற்கு சீனாவை இலங்கை நம்பியது.

ஜெனீவாவில் மட்டுமன்றி, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கூட 'வீற்றோ' உரிமையைக் கொண்ட ஒரு நாடாக சீனா இருப்பது, இலங்கைக்குப் பலத்தைக் கொடுத்தது. சர்வதேசத் தளத்தில் உருவாகக்கூடிய எந்தப் பிரச்சினையிலிருந்தும் சீனா தம்மைப் பாதுகாக்கும் என கொழும்பு முழுமையாக நம்பியதற்கு சீனாவின் இந்த 'வீற்றோ' பலமும் ஒரு காரணம். ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் கொண்டுவரப்படும் சந்தர்ப்பங்களில், சீனாவும், அதன் ஆதரவு நாடுகளுமே இலங்கைக்கு ஆதரவாக நின்றுள்ளன. அதாவது, சர்வதேச அரங்கில் இலங்கைக்கு பலமான ஒரு நாட்டின் ஆதரவு தேவையாக இருந்தது.

இந்த இரண்டு விடயங்களையும் தெளிவாகப் புரிந்துகொண்டிருந்த சீனா அதனை நன்கு பயன்படுத்தியது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது கால்களை ஆழமாகப் பதிப்பதற்கு இலங்கையின் அமைவிடம் கேந்திர ரீதியில் பலமானது என்பதை சீனா உணர்ந்திருந்தது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அம்பாந்தோட்டை, கொழும்பு துறைமுக நகர், துறைமுக கிழக்கு முனையம் என கால் பதித்துள்ள சீனா, கடன் பொறிக்குள்ளும் இலங்கையைச் சிக்கவைத்திருந்தது. ஆனால், சேதன பசளை விவகாரத்தில் இப்போது சிக்கலை சந்தித்துள்ளது.

இரசாயன உரங்களின் இறக்குமதியை அதிரடியாகத் தடை செய்த கோட்டாபய ராஜபக்ஷ அரசு, அதற்கு மாற்றீடாக தேவையான இயற்கை உரத்தை விவசாயிகளுக்கு வழங்குவதில் தடுமாறியது. இறுதியாக சேதனப் பசளையையும் இறக்குமதி செய்யும் முடிவை கோட்டாபய அரசாங்கம் எடுத்த போது, அதிலும் சீனாவுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது. சீன அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள Qingdao Seawin Biotech Group Co Ltd என்ற நிறுவனத்துக்கு இந்த பசளையைக் கொண்டுவருவதற்கான கொள்வனவு ஒப்பந்தம் இலங்கை அரசால் வழங்கப்பட்டது.

இதன்படி, சீனாவிலிருந்து வந்த கப்பலில் கொண்டு வரப்பட்ட பசளை ஆபத்தான பற்றீரியாக்களைக் கொண்டிருப்பதாக அது குறித்த பரிசோதனைகளில் வெளிப்பட்டது. பசளை மாதிரியை விவசாய திணைக்களத்தின் தாவர சோதனைப் பிரிவு நடத்திய பரிசோதனையில் அர்வீனியா எனப்படும் பாதிப்புக்குரிய பற்றீரியா கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து கொழும்புத் துறைமுகத்துக்குள் அனுமதிக்க துறைமுக அதிகார சபை மறுத்தது. அரசாங்கத்தின் உத்தரவையடுத்தே துறைமுக அதிகார சபை குறிப்பிட்ட கப்பலுக்கான கதவுகளை மூடியதாகச் சொல்லப்பட்டது. இது சீனாவுக்குக் கடும் அதிச்சியைக் கொடுத்தது. சீனாவுக்கு இச்சம்பவம் அதிர்ச்சியைக் கொடுத்தமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று: தமது பொறியில் சிக்கியுள்ள இலங்கை, என்ன சொன்னாலும் கேட்கும் என சீனா எதிர்பார்த்தது. இலங்கையின் கதவடைப்பு சீனாவை அதிர்ச்சிக்குள்ளாக்கியமைக்கு இது முதலாவது காரணம். இரண்டாவது: குறிப்பிட்ட சீன நிறுவனம் தமது சேதன பசளையை பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது. அதன் தரம் குறித்து கேள்வி எழுப்பி இலங்கை அதனைத் தடை செய்வது, சர்வதேச ரீதியாக அதன் நற்பெயரைப் பாதிக்கக்கூடியது. அது வர்த்தக ரீதியாக பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும். மீண்டும், தரப்பரிசோதனை செய்து குறிப்பிட்ட பொருட்களை இலங்கையில் இறக்கிவிட வேண்டும் என்பதில் சீனா தீவிரமாக இருந்தமைக்கு காரணமும் அதுதான்.

இந்த இடத்தில் ஒரு நட்பு நாட்டுடன் நடந்துகொள்வது போல சீனா செயற்படவில்லை என்ற கருத்து ஒன்றும் முன்வைக்கப்படுகின்றது. குறிப்பிட்ட சீன நிறுவனத்துக்கான கொடுப்பனவை செலுத்த வேண்டிய பொறுப்பைக் கொண்டிருந்த இலங்கையின் மக்கள் வங்கியை சீனா கறுப்புப் பட்டியில் போட்டது. இதனைவிட, இலங்கை மீது வேறு விதமான அழுத்தங்களும் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

சீனாவுடனான நெருக்கத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தியா மற்றும் மேற்கு நாடுகள் கொடுக்கும் அழுத்தங்கள் ஒருபுறம். சீனாவின் உண்மை முகம் வெளிப்பட்டிருப்பது மறுபுறம் என சில முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் கோட்டாபய அரசுக்கு ஏற்பட்டது. விவசாயிகளின் போராட்டம், “சீனாவின் சேதனப் பசளை” விவகாரத்தினால் மக்களிடம் ஏற்பட்ட அதிருப்தி என்பன இந்த நிர்ப்பந்தத்துக்கு மேலும் பலத்தைக் கொடுத்தது.

இலங்கைக்கு தற்போதுள்ள பிரதான பிரச்னை அதலபாதாளத்தில் விழுந்துள்ள பொருளாதாரம்தான். இந்த பொருளாதாரத்தை நிமித்துவதற்காகப் பெற்ற கடன்கள் மூலமாகத்தான், சீனாவின் கடன் பொறிக்குள் சிக்கவேண்டிய அவலம் இலங்கைக்கு ஏற்பட்டது. இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வு, பொறுப்புக் கூறல் போன்றவற்றை தமது கேந்திர நலன்களுக்காகத்தான் இந்தியாவும் மேற்கு நாடுகளும் பயன்படுத்துகின்றன என்பது ராஜபக்ஷக்களுக்குத் தெரியாததல்ல. சீனாவின் பிடியிலிருந்து இலங்கையை வெளியே கொண்டுவருவதற்கான துருப்புச் சீட்டாகத்தான் அவற்றை இந்த நாடுகள் பயன்படுத்துகின்றன என்பதும் இரகசியமானதல்ல.

இந்தப் பின்னணியில்தான் பஸில் ராஜபக்ஷவை இந்தியா இப்போது அழைத்திருக்கின்றது. அமெரிக்க பிரஜையான பஸில், இலங்கை அரசின் போக்கைத் தீர்மானிப்பதில் பிரதானமானவர். அத்துடன், நிதி அமைச்சர். அரசாங்கத்தின் சார்பில் எந்தவொரு பொருளாதாரத் தீர்மானங்களையும் எடுக்கக்கூடிய அதிகாரத்தைக் கொண்டவர். பொருளாதார விவகாரங்கள் மற்றும் இலங்கையில் இந்தியாவின் முதலீடுகள் குறித்தே பஸில் ராஜபக்ஷவின் விஜயத்தின் போது, டில்லியில் முக்கியமாகப் பேசப்படவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தியாவின் பிரதான தொழில் அதிபர்களில் ஒருவரான அதானியும் அவரது மகனும் சில வாரங்களுக்கு முன்னர்தான் இலங்கை வந்து முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து ஆராய்ந்து சென்றிருந்தார்கள். அதானி இந்தியப் பிரதமர் மேடியுடன் நெருக்கமான ஒருவர்.

இலங்கையின் பொருளார நெருக்கடிக்கு தீர்வாக அமையக்கூடியவை முதலீடுகள்தான். அந்த முதலீடுகளை இந்தியா பெருமளவுக்குக் கொண்டுவருமாக இருந்தால், மேலும் மேலும் சீனாவின் பக்கம் சாய வேண்டிய அவசியம் இலங்கைக்கு வராது. அதே வேளையில், சேதன பசளை விவகாரத்தில் முரண்பாடுகள் வெளிப்பட்டுள்ள நிலையில், மாற்று வழி ஒன்றைத் தேட வேண்டிய தேவையும் இலங்கைக்கு உள்ளது.

அமெரிக்காவுக்கு ஏற்கனவே தென்பகுதியில் மின் உற்பத்தி நிலையம் ஒன்று பெரும் சர்ச்சைகள் மத்தியில் கொடுக்கப்பட்டுள்ளது. இப்போது இந்தியாவையும் சமாளித்தால் நிலைமைகளை சுமூகமாக்கலாம் என கொழும்பு கணக்குப் போடுகின்றது. ஒன்று முதலீடுகள் மூலம் தேவையான பணம் கிடைக்கும். இரண்டு, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் போன்றவற்றுக்கான அழுத்தங்கள் குறையும் என்பது இலங்கையின் கணக்கு! ■

# போலந்து - பெலாரஸ் எல்லையில் உருவாகும் அகதிகள் நெருக்கடி

போலந்து நாட்டுக்குச் சென்று, அங்கிருந்து மைய ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் எண்ணத்தோடு, மத்திய கிழக்கு நாடுகளையும் ஆசியாவையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான குடிபெயர்வாளர்கள், பெலாரஸ் நாட்டிலிருந்து போலந்து நாட்டுக்குள் செல்லும் ‘குஸ்நிற்ஸா’ (Kuznica) எல்லைக் கடவையில் திரண்டிருக்கிறார்கள்.

கடந்த வாரம் அதிகாரிகள் இந்தக் கடவையை மூடியிருப்பதோடு, பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அங்கு ஒன்று கூடியிருப்பதை வானவூர்திகளிலிருந்து எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் காட்டுகின்றன. ஐரோப்பாவின் எல்லைப் புறத்தில் தற்போது உருவாகிக் கொண்டிருக்கும் ஒரு பாரிய மனித அவலத்தை இந்தக் கட்டுரை ஆராய்கின்றது.



**மோசமான சூழலில் குடிபெயர்வாளர்கள்**

இந்த எல்லையில் சிக்கியுள்ள மக்கள், கடுங் குளிர், உணவுப் பற்றாக்குறை, மருத்துவ வசதிகள் இன்மை போன்ற நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் அதேவேளை, அங்குள்ளவர்கள் தாக்கப்படுவதாகவும் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஏறத்தாழ 3500 பேர் கடந்த திங்கட்கிழமை, குஸ்நிற்ஸா எல்லைக் கடவையில் திரண்டிருப்பதாக போலந்து நாட்டின் காவல்துறையினர் தெரிவித்திருக்கிறார்கள். இக்குறிப்பிட்ட எல்லைக் கடவையில் அண்ணளவாக 2000 எண்ணிக்கையிலான மக்கள் திரண்டிருப்பதாகவும் அவர்களில் 200 சிறுவர்களும் 600 பெண்களும் உள்ளடங்குகிறார்கள் என்று பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த எல்லைக்கண்காணிப்பு அதிகாரிகள் தகவல் வழங்கியிருக்கிறார்கள்.

போலந்து நாட்டு எல்லைப்புறத்தில் 7 குடிபெயர்வாளர்கள் இறந்திருந்ததை தாங்கள் கண்டதாக போலந்து நாட்டைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தார்கள். பெலாரஸ் நாட்டின் எல்லைப் புறத்திலும் பல இறப்புகள் ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. போலந்து அதிகாரிகளின் கூற்றுப்படி, எல்லையைக் கடப்பதற்கு நவம்பர் மாதத்தின் ஆரம்பத்தில் இருந்து, மேற்கொள்ளப்பட்ட பல்லாயிரக் கணக்கான முயற்சிகள் பதிவாகி இருக்கின்றன.

‘குஸ்நிற்ஸா’ எல்லையைக் கடப்பதற்கு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கடந்த வார இறுதியில் பலவந்தமாகத் தூண்டப்பட்டதாக போலந்து எல்லைக்காவற் படையின் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்ததோடு, எல்லையிலே மிகப் பதற்றமானதும் அதே நேரம் மிகவும் ஆபத்தானதுமான சூழல் நிலவுவதாகவும் தெரிவித்தார். குறிப்பிட்ட எல்லையில் மக்கள் பெருமளவில் திரள்வதைத் தடுப்பதற்கு பெலாரஸ் வேண்டியது அனைத்தையும் செய்து வருகின்றது என்று அந்த நாட்டு அதிபரான அலெக்சாண்டர் லூக்காஷெங்கோ தெரிவித்தார்.

மிகச் சிறிய எண்ணிக்கையிலான மக்களையே போலந்து அதிகாரிகள் தடுத்து வைத்திருப்பதுடன் மிகச்சிறிய எண்ணிக்கையிலான மக்களே போலந்து நாட்டில் தஞ்சக் கோரிக்கைக்கு விண்ணப்பிக்கவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் உடனடியாக பெலாரஸ் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள். போலந்து எல்லைக்குச் செல்லும் வழிவகைகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஊடகவியலாளர்களும் உதவி அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் அந்த இடத்துக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**எல்லைக்கு வந்த போலந்து ஜனாதிபதி**

தனது நாட்டின் இராணுவம், காவல்துறை, எல்லைக்காவற் படையினர் போன்றவர்களுடன் தான் கூட இருப்பதாகக் காட்டும் நோக்குடன், போலந்து ஜனாதிபதி அஞ்சே டூடா கடந்த வியாழக்கிழமை குறிப்பிட்ட எல்லைக்குப் பயணம் செய்திருக்கிறார். அதற்கு முன்னதாக தங்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாட வோசோவில் கூடியிருந்த மக்கள் நடுவில் டூடா உரையாற்றியிருந்தார்.

“உங்கள் தாய்நாட்டைப் பாதுகாக்க வேண்டிய நேரம் இப்போது வந்திருக்கிறது. கடந்த காலத்தை விட இன்னும் அதிகமாக எங்களது எல்லைகளை இப்போது நாங்கள் பாதுகாக்க வேண்டும். அர்ப்பணிப்புடனும், தூக்கமற்ற இரவுகளுடனும், குளிர், மற்றும் இன்னோரன்ன கஷ்டங்கள் நடுவிலும் நாங்கள் இதனைச் செய்ய வேண்டும். எமது நாடான போலந்து நாட்டுக்கு எதிராகவும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எதிராகவும் மிகவும் நன்றி கெட்டதனமாக நடந்து கொள்கின்ற பெலாரஸ்அரசின் நடவடிக்கைகளால் இப்படியான நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம்” என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

அதே நேரம், பாதுகாப்பைக் கோருகின்ற தஞ்சக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளாது, மீண்டும் பலவந்தமாக அவர்களை பெலாரஸ் நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதன் மூலம், அந்தத் தஞ்சக் கோரிக்கையாளர்களுக்கு இருக்கின்ற பன்னாட்டு உரிமையை மறுப்பதாக, போலந்து நாட்டின் ஆளுங்கட்சியை மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

தங்கள் நாட்டில் துன்புறுத்தல்களைச் சந்திக்கும் போது பிறிதொரு நாட்டில் ஒருவர் தஞ்சக் கோரிக்கையை முன்வைக்கலாம் என்று மனித உரிமைச் சாசனத்தின் 14ஆவது பிரிவு சுட்டிக் காட்டுகிறது. போலந்தோ தனது செயற்பாடுகள் சட்டபூர்வமானவை எனக்கூறுகின்றது.

**மிகப்பெரும் அரசியல் நெருக்கடி உருவாகிறது**

பெலாரஸ் நாட்டின் எல்லையில் அயல் நாடுகளான போலந்து, லத்வியா, லித்துவேனியா ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகளால் ஒரு நெருக்கடி உருவாக்கப்படுவதற்கும், பின்னர் பெலாரஸூடனான தமது எல்லையில் ஒரு தடுப்புச் சுவரை எழுப்புவதற்கான சட்டத்தைப் போலந்து ஜனாதிபதி கொண்டுவருவதற்குமான நெருக்கடியின் காரணகர்த்தாவாக பெலாரஸ் ஜனாதிபதி லூக்காஷெங்கோவே இருப்பதாக குற்றஞ் சுமத்தப்பட்டிருக்கிறது.

பெலாரஸ் வான்வெளியில் அந்த நாட்டின் விமானப்படையுடன் இணைந்து ஒரு விமானப்படை நடவடிக்கையை சென்ற வாரம், மேற்கொண்டதன் மூலம் லூக்காஷெங்கோ அரசுக்கு தனது ஆதரவை ரஷ்யா கோடிட்டுக்காட்டியிருக்கிறது.

Tu-22M3 என்ற பெயரைக் கொண்ட மிக நீண்ட தூரத்துக்குக் குண்டுவீசித் தாக்கக் கூடிய ஆற்றலைக் கொண்ட Tupolev வகையைச் சேர்ந்த இரண்டு மிகையொலி குண்டுவீச்சு விமானங்கள், கடந்த புதன்கிழமை, இரண்டு நாட்டு ஆயதப் படையினரும் இணைந்து மேற்கொண்ட ஒரு பயிற்சி நடவடிக்கையில் தரைக் கட்டுப்பாட்டு மையங்களுடன் இணைந்து செயற்படும் நடவடிக்கையை ஒத்திகை பார்த்ததாக, ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு செய்தி வெளியிட்டது. பெலாரஸூக்கு மேலாகப் பறந்து ரஷ்ய விமானங்கள் ஒத்திகை பார்த்தது இது இரண்டாவது தடவையாகும்.

வெள்ளிக்கிழமை போலந்து எல்லைக்கு அருகாக பாரசூட் வீரர்களுக்கான ஓர் ஒத்திகையை இரண்டு நாடுகளும் இணைந்து மேற்கொண்டன. இது இப்படியிருக்க, உக்ரெய்யின் (Ukraine) நாடும் பெலாரஸ் நாட்டுடன் தாம் பகிர்ந்து கொள்ளும் எல்லைக்கு அருகில் தமது இராணுவ நடவடிக்கைகளை அதிகரித்திருக்கின்றன. குடிபெயர்வாளர்கள் தொடர்பாக அப்பிரதேசத்தில் ஏற்படக்கூடிய ஒரு நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக போலந்து, பெலாரஸ் ஆகிய நாடுகளுடன் தாம் பகிர்ந்துகொள்ளும் எல்லைக்கு அருகில் உள்ள ஒரு இடத்தில் 8500 எண்ணிக்கையிலான படையினரைக் கொண்ட ஓர் இராணுவப் பயிற்சி நடவடிக்கையை மேற்கொள்ள இருப்பதாக உக்ரெய்யின் வியாழக்கிழமை அறிவித்தது.

“தற்போது மேற்கொண்டு வரும் இராணுவ நகர்வுகளைக் கைவிட்டு, பதற்றத்தைக் குறைத்து, உக்ரெய்யினில் உள்ளும் புறமும் தாம் மேற்கொண்டு வரும் இராணுவச் செயற்பாடுகள் தொடர்பாக வெளிப்படைத் தன்மையைப் பேண வேண்டும்” என்று உக்ரெய்யின் வெளிவிவ கார அமைச்சருடன் பிரஸ்ஸல்ஸ் நகரில் தான் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, ரஷ்யாவை நோக்கி ஸ்ரோல்ற்றன்பேர்க் அழைப்பு விடுத்தார். உக்ரெய்யின் (NATO) நேற்றோ அமைப்பின் ஓர் அங்கத்துவ நாடு அல்ல. இருப்பினும் அந்த நாட்டுக்கு உதவத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார். ‘ரஷ்யா இந்தப் பிரதேசத்தில் தனது இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது’ என்று ரஷ்யாவை அமெரிக்கா குற்றஞ்சாட்டிவரும் பின்புலத்தில், ஏற்கனவே மிகப் பலவீனமான அரசியல் ஒழுங்கைக் கொண்டிருக்கின்ற இப்பிரதேசத்தை, போலந்து-பெலாரஸ் எல்லையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி, மேலும் கேள்விக்கு உள்ளாக்கி, பாரிய பூகோள அரசியல் நெருக்கடி ஒன்றைத் தோற்றுவிக்கக் கூடிய ஆபத்து இருக்கின்றது என்று அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கிறார்கள்.

ரஷ்யா மேற்கொண்டு வரும் அசாதாரண இராணுவ நகர்வுகள் தொடர்பாகத் தாம் கவலையடைவதாகவும், 2014ஆம் ஆண்டு உக்ரெய்யினைத் தாம் ஆக்கிரமித்தது போன்றதொரு நகர்வை மீண்டும் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் அமெரிக்காவின் அரசாங்க அமைச்சர் அன்ரனி பிளிங்கன் (Antony Blinken) கடந்த புதன்கிழமை தெரிவித்தார். “உக்ரெய்யினைத் தாம் ஆக்கிரமிக்கலாம் என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் வெறுமையானவை, ஆதாரமற்றவை, பதற்றத்தை ஏற்படுத்துபவை” என்று கடந்த வெள்ளிக்கிழமை ரஷ்யா கருத்துத் தெரிவித்தது.

**புதிய தடைகளை எதிர்கொள்ளும் பெலரூஸ்**

“பெலாரஸ் நாடு மேற்கொண்டு வருகின்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடைகளுக்குப் பழி வாங்கும் நோக்கத்துடனேயே குடிபெயர்வாளர்களின் இந்த நெருக்கடியை வேண்டுமென்றே பெலாரஸ் உருவாக்கியிருக்கிறது” என்று ஐரோப்பியத் தலைவர்கள் பெலாரஸ் மீது குற்றம் சுமத்தியிருக்கிறார்கள். பெலாரஸ் அரசோ இக்குற்றச்சாட்டை தொடர்ந்து மறுத்து வருகிறது,

அகதிகள் நெருக்கடியில் அதிகரிக்கும் பதற்றம் பெலாரஸ்-போலந்து எல்லையில் தற்போது உருவாக்கப்பட்டுள்ள நெருக்கடிக்குப் பதிலிறுக்கும் விதமாக பெலாரஸூக்கு எதிராகப் புதிய தடைகளை அமெ ரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் கடந்த வாரம் விதித்திருக்கின்றன. “ஐரோப்பிய ஒன்றியம் பெலாரஸ் மீது ஏற்கனவே விதித்திருக்கும் தடைகளைத் தொடரப் போவதாக” ஒன்றியத்தின் வெளிநாட்டுக் கொள்கைக்குத் தலைமை தாங்குகின்ற ஜோசப் பொரெல் (Joseph Borrell) தெரிவித்தார்.

“தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக பெலாரஸ் மக்கள் நடுவில் இருப்பவர்களுக்கு எதிராக, ஒரு தொகுதி புதிய தடைகளை விதிக்க இருக்கிறோம். சட்டவிரோதமான முறையில் எமது எல்லைகளை நோக்கி குடிபெயர்வாளர்களை நகர்த்திக் கொண்டிருக்கும் ஏனையவர்கள், விமான நிறுவனங்கள், பயண ஒழுங்கமைப்பு நிறுவனங்கள், என்று அனைவருக்கும் எதிராக புதிய வடிவமைப்பிலான தடைகளை நாங்கள் அமுல் நடத்தவிருக்கிறோம்” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பெலாரஸில் நாடு முழுவதும் பெருமளவான ஆர்ப்பாட்டங்களைத் தோற்றுவித்த தேர்தல் நடைபெற்று ஓராண்டு நிறைவடைந்த நாளில், இந்த நிறைவேற்றுக் கட்டளை வெளியிடப்பட்டது. அக்குறிப்பிட்ட தேர்தல் மோசடி நிறைந்தது என்று அமெரிக்காவும் பன்னாட்டு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் கண்டனம் செய்தது இங்கு நினைவு கூரத்தக்கது. ■

**- சி.என்.என்.**


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - II நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

❖ **15 தொடக்கம் 29 வரையான வினாக்களிற்குப் பொருத்தமான விடை எழுதுக.**

15) 


எண்சட்டத்தில் வகைக் குறிக்கப்படும் எண்ணைச் சொற்களில் எழுதுக?


……………………………………………………………………………

16)

| | | |
|---|---|---|
| | | 9 |
| | 7 | 1 |
| 5 | 0 | |

அருகே தரப்பட்டுள்ள எல்லா இலக்கங்களையும் ஒரு தடவை பயன்படுத்தி உருவாக்கக் கூடிய மிகப்பெரிய எண்ணை எழுதுக

……………………….

17) 

1) நிறந்தீட்டப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கையை உரோமன் எண்ணில் எழுதுக?


………………………

2) பின்வரும் உரோமன் எண்களை ஏறுவரிசையில் எழுதுக?

XX, XV, XI, VIII - ……………………………………….

18) 60 கொடிகளைக் கொண்டு ஒவ்வொரு கொடித் தொகுதியிலும் சம எண்ணிக்கையில் கொடிகள் இருக்குமாறு 4 கொடித்தொகுதிகளை அமைக்கலாம். ஒரு கொடித்தொகுதியில் உள்ள கொடிகளின் எண்ணிக்கை யாது?

…………………………

19) 

1) கடிகாரமுகத்தில் ஒரு மணி கழிந்து ஐம்பது நிமிடத்தினை குறித்துக் காட்டுக?
2) பி.ப 2.00 மணியை 24 மணிநேரக் கடிகாரத்தில் காட்டப்படும் முறையில் எழுதுக?


…………………………

20) பூக்கன்று விற்பனை நிலையத்தில் 3874 மல்லிகைக் கன்றுகளும் 2579 ஓக்கிட் கன்றுகளும் 1023 ரோசாக்கன்றுகளும் இருந்தன. அங்கு இருந்த மொத்தப் பூக்கன்றுகள் எத்தனை?

………………………

21) எண்கோலத்தினை அவதானித்து வெற்றிடத்தினைப் பூர்த்தி செய்க.

1) ………., ……….., 54, 63, 72
2) 2, 9, 16, 23, ……….

22) 

1) இவ்வுருவில் $\frac{2}{4}$ பகுதியை பென்சிலால் நிறம் தீட்டுக.
2) நிறம் தீட்டிய பின்னர் எஞ்சிய பகுதியை முழுவதின் பின்னமாக எழுதுக?

…………………………

23) ஒரு கூடையில் 150 ரம்புட்டான் பழங்கள் வீதம் 3 கூடைகளில் ரம்புட்டான் பழங்கள் உள்ளன. 3 கூடைகளிலும் உள்ள மொத்த ரம்புட்டான் பழங்கள் எத்தனை?

………………………..

24)

| விலைப்பட்டியல் | | |
|---|---|---|
| பொருள் | விலை | |
| | ரூபாய் | சதம் |
| பயிற்சிக்கொப்பி | 35 | . 00 |
| பென்சில் | 6 | . 50 |
| பேனை | 12 | . 50 |
| அழிறப்பர் | 15 | . 25 |

1) ஒரு பென்சிலும் ஒரு பேனையும் வாங்கினால் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

ரூபாய் ……………………

2) இரண்டு பொருட்கள் வாங்கிய பின் ரூபாய் 50.25 செலுத்தப்பட்டது எனின் வாங்கிய இரண்டும் பொருட்களும் எவை?

………………………… , ……………………………

25) ஒரு பாத்திரத்தில் $5l\ 750ml$ நீர் உள்ளது. அப்பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்காக மேலும் $4l\ 750ml$ நீர் இட வேண்டியுள்ளது. அப் பாத்திரம் கொள்ளும் நீரின் மொத்த அளவு யாது?

……………***l***…………***ml***

26) 2kg 100g நிறையுள்ள ஒரு வத்தகைப்பழமும் 1kg 850g நிறையுள்ள மற்றொரு வத்தகைப்பழமும் உள்ளன. இந்த இரண்டு வத்தகைப்பழங்களின் நிறைகளுக்கு இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

…………………………g

27) 

1) இத் தள வடிவங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய திண்மவுரு எது?


…………………………

2) அதன் விளிம்புகள் எத்தனை? …………………………

28) சமமான அளவுள்ள 3 மேசைகளில் விரிப்பதற்காக 6m 75cm மேசைத்துணி கொண்டுவரப்பட்டது. ஒரு மேசைக்குத் தேவையான துணியின் நீளம் யாது?

…………m ………..cm

29) 4 நாட்களில் விற்பனையாகிய சிறுவர் பத்திரிகை தொடர்பான விபரம் வரைபில் காட்டப்பட்டுள்ளது.




1) அதிகமான சிறுவர் பத்திரிகைகள் விற்கப்பட்ட நாள் எது?

…………………

2) 4 நாட்களிலும் விற்கப்பட்ட சிறுவர் பத்திரிகைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

……………………

# தலைமைப் பதவிக்குப் பொருத்தமற்றவர் சஜித்!

## ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை மிரட்டியே அவர் வேட்பாளராகக் களமிறங்கினார் என்று பாலித குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 30

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, தலைமைப் பதவிக்குப் பொருத் தமற்றவர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பௌத்த தலைவ ரான கரு ஜயசூரியவை கள மிறக்கவே ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டிருந்தார். வெற்றிக்கான வியூகங்களையும் வகுத்திருந்தார்.

ஆனால், கருவை களமிறக்கி னால் தான் தனித்துப் போட்டி யிடுவார் என ரணிலை சஜித் மிரட்டினார். சஜித் வேட்பாள ராகக் களமிறங்கியதால்தான் ஜே.வி.பியின் ஆதரவும்



கிடைக்கவில்லை.

ரணிலால் முடியாது என்ற கருத்தை மங்களவே உருவாக் கினார். ரணிலால் என்ன முடியாது? அவரை நம்பித்தான் தற்போது நாடு உள்ளது. தூர நோக்கு சிந்தனையுடைய தலை வரே அவர்" - என்றார். (இ)

---

# உள்ளே இருந்து போராடுவோம் வெளியேறும் எண்ணம் இல்லை

## சு.கவின் பொதுச்செயலர் கருத்து



கொழும்பு, நவ. 30

**அரசில் இருந்து விலகுவதற்கான எந்தத் தீர்மானமும் எடுக் கப்படவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செய லாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள் ளார்.**

அரசு தொடர்பில் சில விமர்சனங்கள் இருந்தாலும் தொடர்ந்தும் அரசுடன் இணைந்து செயற்பட எதிர் பார்ப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

குருநாகலில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் இரா ஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

அதன்போது, "அரசிலிருந்து விலக எந்த முடிவும் எடுக்கப் படவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான பிரசாரங் கள் செய்கிறார்கள். அதைப் பற்றி நாங்கள் கவலைப்பட வில்லை. நாங்கள் இன்னும் அரசுடன் இணைந்து செயற் படுகின்றோம்" - என்றார்.

"அரசின் மீது உங்களுக்கு ஏமாற்றம் இல்லையா?" என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ள அவர்,

"இல்லை, இல்லை. அரசு தொடர்பில் எந்த ஏமாற்றமும் இல்லை. அந்தந்த சமயங்களில் பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கிறோம். இது நாங்கள் உருவாக்கிய அரசு நாங்கள் உருவாக்கிய ஜனாதிபதி. எனவே, அரசிலுள்ள பலவீனங் களைச் சரி செய்து முன்னோக் கிச் செல்ல முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது" - என் றார். (இ)

---

# ரயிலில் மோதுண்டு குடும்பஸ்தர் மரணம்

கொழும்பு, நவ. 30

ரயிலில் மோதுண்டு குடும் பஸ்தர் ஒருவர் மரணமடைந் துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள் ளது.

கண்டி, கட்டுகஸ்தோட் டைப் பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வட்டபுலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயது நபரே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

மாத்தளையிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டே குறித்த நபர் மரணமடைந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக கண்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கட்டு கஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ)

---

# கூட்டு ஒப்பந்தம் இல்லாததால்தான் தொழிலாளர்களுக்கு நெருக்கடிகள்

## இ.தொ.கா. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 30

கூட்டு ஒப்பந்தம் இல்லாத தால்தான் இன்று பெருந் தோட்ட மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக் கின்றனர் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

"கூட்டு ஒப்பந்தத்தை விமர்சித்தவர்கள்கூட இன்று



அதன் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளனர்.

தோட்டப் பகுதிகளிலுள்ள தரிசு நிலங்கள் அங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.


தோட்டப்பகுதிகளிலுள்ள மரங்களை நிர்வாகங்கள் வெட்டி விற்கின்றன. இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்" - என் றார். (இ)

---

# சந்தையில் சதமடிக்குமா பாண்?

கொழும்பு, நவ. 30

450 கிராம் எடையுடைய ஒரு இறாத்தல் பாணை குறைந்தபட்சம் 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.டி ஜெயவர்த்தன தெரிவித்தார்.



எனினும், மக்களின் நன்மை கருதி 450 கிராம் பாணின் விலையை 10 ரூபாயால் மட்டும் அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-"இரண்டு பிரதான கோதுமை மா நிறுவனங்களில் மாவின் விலையை அதிகரித்துள்ளதாலேயே விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

பாண் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் நீரைத் தவிர ஏனைய அனைத்துப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. எனவே, ஒரு இறாத்தல் பாணை நூறு ரூபாய்வுக்கு விற்றால்தான் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இருந்தும் மக்களுக்காகச் சொற்பளவு அதிகரிப்பையே செய்துள் ளோம்" - என்றார். (இ)

---

# நபர் ஒருவர் சுட்டும் வெட்டியும் கொலை

## இரு சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, நவ. 30

நபர் ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் வெட்டியும் படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அம்பாந்தோட்டை, வீரக்கெட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெபோக்காவ கிழக்கு மற்றும் எம்பி லிப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 33, 29 வயதுகளை யுடைய இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தெபோக்காவ பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபரைப் பொலி ஸார் கைதுசெய்து அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து தெபோக்காவ பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட் டில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கி, கைக்குண்டு என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நபரிடம் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய சந்தேகநபர் கைதுசெய் யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து துப்பாக்கி மற்றும் தோட்டாக் கள் என்பவையும் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ)

---

# மதுபோதையில் தவறி விழுந்து இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 30

கம்பஹா, நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெலின்வீதிய பிரதேசத் திலுள்ள விடுதியொன்றில் பணியாற்றி வந்த இளைஞர் ஒருவர் படிக்கற்களிலில் இருந்து விழுந்து மரண மடைந்தார் என்று நீர் கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிமடை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய நபரே இவ்வாறு மரணமடைந்தார்.

குறித்த விடுதியில் விருந்துப சாரம் ஒன்று நடைபெற்றுள்ள நிலையில் அந்த விருந்துபசாரத் தில் பங்கேற்ற குறித்த இளை ஞர் அதிக மதுபானம் அருந்தி யுள்ளார்.

இந்நிலையில், விடுதியின் நான்காம் மாடிக்குச் செல்வதற் காக விடுதியில் அமைக்கப்பட் டிருந்த படிக்கற்களில் ஏறியுள் ளார்.

இதன்போது தவறி விழுந்து நிலையில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

அவர் உடனே வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலை யில் சடலம் வைக்கப்பட்டுள் ளது. இது தொடர்பில் நீர் கொழும்பு பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ)

# சீனாவின் கைக்கு செல்லும் உகண்டா விமான நிலையம்!

## கடனை திருப்பிச் செலுத்த முடியாததால் சிக்கல்!!




கம்பாலா, நவ. 30

சீனாவிடம் வாங்கிய கடனை உகண்டா திருப்பிச் செலுத்தாத தால் அந்நாட்டில் உள்ள ஒரேயோர் சர்வதேச விமான நிலையத்தை சீனா கையகப்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஆப்பிரிக்க செய் தித் தளங்கள் பரபரப்பு செய்தி வெளியிட்டுள்ளன.

இருப்பினும், ஆபிரிக்க சிவில் விமான சேவை ஆணையம் மற்றும் சீன அரசு இரு தரப்பும் இந்தச் செய் திகளை மறுத்துள்ளன.

ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதி யில் உள்ள மிகவும் ஏழ்மையான நாடான உகண்டா, சீனாவின் எக்ஸிம் பொதுத்துறை வங்கியிடம் கடந்த 2015 ஆம் ஆண்டு 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வாங்கியது. கடனுக்கு 2 சதவீதம் வட்டி. 20 ஆண்டில் திருப்பி செலுத்த வேண்டும். 7 ஆண்டுகள் கூடுதல் அவகாசம் வழங்கப்படும் என இதன்போது ஒப்பந்தம் செய் யப்பட்டது.

உகண்டாவில் உள்ள ஒரேயோர் சர்வதேச விமான நிலையமான எண்டெபே விமான நிலையத்தை மேம்படுத்தவே உகண்டா அரசு இந்த கடனை வாங்கியது.

ஆனால், கடனை திருப்பி செலுத்த தவறினால், எண்டெபே விமான நிலையம் உட்பட சில அரசு சொத்துக்கள் அடமானமாக பெறப்படும் என கடுமையான விதி முறையை சீனா வகுத்துள்ளது.

அதுமட்டுமன்றி எந்த சர்வதேச பாதுகாப்பும் இல்லாமல் விமான நிலையத்தை ஒப்படைக்க வேண்டு மெனவும் கடன் விதிமுறையில் கூறப்பட்டுள்ளது. இந்த விடயத் தில் உகண்டா எந்த சர்வதேச நாட்டின் உதவியையும் நாட முடி யாது எனவும் ஒப்பந்தத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனது ஒரேயொரு விமான நிலையத்தை சீனாவிடம் இழந்துவிடாமல் தவிர்க்கும் நோக்குடன் உகாண்டா சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. தனது குழுவையும் உகண்டா அரசு பீஜிங் அனுப்பியது.

ஆனால், சீன அதிகாரிகள் உகண் டாவின் கோரிக்கைக்கு இணங்க வில்லை. இதனால் உகண்டா குழு தோல்வியுடன் நாடு திரும்பி உள்ளது. இதனால் அந்நாடு தனது ஒரே சர்வதேச விமான நிலையத் தையும் சீனாவிடம் இழக்கும் அபாயம் அதிகம் இருப்பதாக தென்னாபிரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, இந்த கடன் ஒப்பந் தத்தில் தவறு செய்துவிட்டதாக அந்நாட்டு நிதி அமைச்சர் பாராளுமன் றத்தில் பகிரங்க மன்னிப்பும் கோரி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(அ)



# பிரான்ஸில் ஒரு டசின் பேருக்கு 'ஒமைக்ரோன்' தொற்று அறிகுறி!

## முடிவுகள் சில மணிநேரங்களில் தெரியவரும் என்கிறார் அட்டால்

பாரிஸ், நவ. 30

ஐரோப்பிய நாடுகளில் 'ஒமைக்ரோன் வைரஸ் தொற் றாளர்கள் கண்டறியப்படுவது தொடர்கிறது.பிரான்ஸில் அதன்தொற்றுப் பரவல் உள்ளதா?

அரசாங்கப் பேச்சாளர் கப்ரியேல் அட்டாலிடம் செய்தியாளர்கள் இவ்வாறு வினவியுள்ளனர்.

"நாங்கள் இப்போது ஆரம்ப கட்டத்தில் இருக்கி றோம்.சந்தேகத்துக்குரிய சுமார் ஒரு டசின் பேரது தொற்றுக்கள் மேலதிகபரிசோதனைகளுக்குட்படுத்தப்ப ட்டுள்ளன.அடுத்த சில மணி நேரங்களில் முடிவு தெரியவரும். தொற்றுக்குச் சாத்தியமான நிலைவரம் உள்ளது."

-இவ்வாறு கப்ரியேல் அட்டால் பதிலளித் திருக்கிறார்.முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய சுகாதார அமைச்சர்ஒலிவியே வேரன் 'ஒமைக்ரோன்' திரிபு ஏற்கனவே நாட்டுக்குள் பரவியிருக்கலாம் - என்று எச் சரித்திருந்தார்.

நாட்டுக்கும் தொற்றுக்கும் இடையே இன்னும் சில மணிநேர இடைவெளிதான் இருக்கிறது என்ற சாரப்பட அவர்கூறியிருந்தார்.

தென்னாபிரிக்காவில் இருந்து நெதர்லாந்தின் ஆம்ஸ்ரடாம் ஷிப்போல் விமானநிலையத்துக்கு வந்த பயணிகளில்-

ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த- அறுபது பேரில் 13 பேருக்கு 'ஒமைக்ரோன்' தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடொன்றில் அறியவந்துள்ள ஆகக் கூடிய தொற்று எண்ணிக்கை இதுவாகும். ஜேர்மனி, இங்கிலாந்து, பெல்ஜியம், இத் தாலி, இஸ்ரேல் போன்ற நாடுகளிலும் புதிய ஆபத்தான இந்தத் திரிபு பரவியுள்ளது.

இஸ்ரேல் உலகில் முதலாவது நாடாக சகல வெளிநாட்டுப் பயணிகளுக்கும் தனது எல்லையை மூடியுள்ளது.

இதேவேளை,

உலகில் 'ஒமைக்ரோன்' தொற்றுநோய் நிலைவரத்தை ஆராய்வதற்காக ஜீ-7 நாடுகளின் சுகாதார அமைச்சர்களது.

அவசர மாநாட்டைக் கூட்டுமாறு பிரிட்டிஷ் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் அழைப்பு விடுத் திருக்கிறார்.

அமெரிக்கா, பிரான்ஸ் ஜேர்மனி, கனடா, இத்தாலி, ஜப்பான்,இங்கிலாந்து ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்ற ஜீ-7 அமைப்பின் மாநாட்டை திங்களன்று கூட்டுமாறு லண்டன் கோரியுள்ளது.

பிரிட்டனில் மூன்று தொற்றாளர்கள் கண்டறியப் பட்டிருப்பதை சுகாதாரப் பாதுகாப்பு முகவரகம் உறுதிப்படுத்தி உள்ளது. முதலாவது தொற்றாளர் லண்டனுக்கு வருகை தந்து மீண்டும் ஆபிரிக்காவுக்குத் திரும்பிவிட்டார். மற்றொருவர்

நொட்டிங்ஹாம் பகுதியிலும் மூன்றாமவர் லண்டனுக்குக் கிழக்கே செம்போர்ட் பகுதியிலும் கண்டறியப்பட்டுள்ளனர்.

அளவுக்கு மீறி அச்சமடைய வேண்டாம். ஒமைக் ரோன் திரிபு தொடர்பான பூரண ஆய்வுகள் நடந்துவரு கிறன. அதற்குள் அவசரப்பட்டு எல்லைகளை மூட வேண்டாம் என்று உலக சுகாதார நிறுவனம் கேட்டி ருக்கிறது. போக்குவரத்துகளைத் தடுத்து எல்லைகளைப் பூட்டியதால் பாதிக்கப்பட்டிருக்கின்ற தெற்கு ஆபிரிக்க நாடுகளுக்குச் சார்பாக அது குரல் கொடுத்துள்ளது. ஒமைக்ரோன் திரிபு தொடர்பில் ஆய்வு களை தொடர்வதற்கு அறிவியலாளர்களுக்கு அவகாசம் அளித்து தற்காப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத் துமாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சுலா வொன் டெர் லேயன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# இன்று முதல் எல்லைகளை ஜப்பான் அரசும் மூடுகிறது!

ரோக்கியோ, நவ. 30

கவலைக்குரிய புதிய ஒமைக்ரோன் உரு திரிபு வைரஸ் குறித்த கவலைகளை அடுத்து உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடான ஜப்பான், அனைத்து வெளிநாட்டினருக்கும் அதன் எல்லைகளை இன்று செவ்வாய்க்கிழமை முதல் மூடவுள்ளது.

இதேவேளை, கட்டுப் பாடுகளைத் தளர்த்தி புலம்பெயர் தொழில் வல்லுநர் களை நாட்டுக்குள் அனுமதிக்கும் அவுஸ்திரேலியாவின் திட்டங்களும் புதிய உரு திரிபு வைரஸ் அச்சம் காரணமாக கைவிடப் படலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

தொற்று நோய் நெருக்கடியை அடுத்து இரண்டு வருடங்களாக தொடரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டும் புதிய பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை அண்மைய சில வாரங்களாக வெளிப்பட்டு வந்த நிலையில் புதிய திரிபு மீண்டும் அச்சத்தை தூண்டி, நாடுகள் தங்கள் எல்லை களை மூட வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியுள்ளது.

தென்னாபிரிக்காவில் முதன்முதலில் கண்டறியப் பட்ட ஒமைக்ரோன் உரு திரிபு முந்தைய திரிபுகளைக் காட்டிலும் வேகமாகப் பரவக்கூடியது என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா, பெல்ஜியம், பொட்ஸ்வானா, பிரிட்டன், கனடா, டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, ஹொங்கொங், இஸ்ரேல், இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் புதிய திரிபு தொற்று நோயாளர்கள் கண்ட றியப்பட்டுள்ளனர்.

ஒமைக்ரோன் உரு திரிபு கவலைக்குரியது என பட்டி யலிட்டுள்ள உலக சுகாதார அமைப்பு, இதன் தீவிரத்தின் அளவைப் புரிந்து கொள்ள சில நாட்கள் முதல் பல வாரங்கள் வரை ஆகலாம் எனத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கவலைக்குரிய புதிய ஒமைக்ரோன் உரு திரிபு வைரஸ் பரவலை தடுக்கும் வகையில் செவ்வாய்க் கிழமை முதல் அனைத்து வெளிநாட்டின ருக்கும் ஜப் பான் தனது எல்லைகளை மூடும் என்று பிரதமர் புமியோ கிஷிடா தெரிவித்தார்.

ஜப்பானில் இதுவரை புதிய ஒமைக்ரோன் உரு திரிபு வைரஸ் தொற்று நோயாளர்கள் எவரும் இன்றுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் முன்னெச்ச ரிக்கை நடவடிக்கையாக எல்லைகளை மூட தீர்மானித் துள்ளதாக பிரதமர் புமியோ கிஷிடா குறிப்பிட்டார். (அ)

# ஒமைக்ரோன் கொரோனா திரிபு கனடாவிலும் உறுதியாகியது!

ஒட்டாவா, நவ. 30

கொரோனா வைரஸின் கவலைக்குரிய புதிய ஒமைக் ரோன் திரிபு கனடாவில் முதன் முதலில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

ஓமிக்ரோன் திரிபு வைரஸால் பாதிக்கப்பட்ட இருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தலைநகர் ஒட் டாவாவில் உறுதிப்படுத்தப்பட்டதாக ஒன்ராறியோவின் சுகாதார அமைச்சர் கிறிஸ்டின் எலியட் உறுதிப்படுத் தினார்.

பாதிக்கப்பட்ட நபர்கள் நைஜீரியாவிலிருந்து பய ணம் செய்தவர்களாவர். அவர்கள் இருவரும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸின் கவலைக்குரிய புதிய ஓமிக் ரோன் திரிபு முதலில் தென்னாபிரிக்காவில் கண்டறியப் பட்டது. உலக சுகாதார நிறுவனம் கடந்த வாரம் புதிய திரிவு குறித்து உத்தியோகபூர்வ தகவலை வெளியிட் டது. அத்துடன், இதனை கவலைக்குரிய வைரஸ் திரி பாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது.

இதனையடுத்து புதிய திரிபு தங்கள் நாட்டுக்குள் நுழையாது தடுக்கும் வகையில் பல நாடுகள் வெளிநாட் டிலிருந்து பயணிகள் தங்கள் நாடுகளுக்கு வர தடை விதித்தன.

ஒமைக்ரோன் திரிபு தொடர்பாக அச்சங்களை அடுத்து தென்னாபிரிக்க பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளுக் கான எல்லைக் கட்டுப்பாடுகளை கனடா விரிவுபடுத் தியது. எனினும் இந்தப் பட்டியலுக்குள் நைஜீரியா உள்ளடக்கப்படவில்லை.

ஒமைக்ரோன் திரிபில் இருந்து கனேடியர்களைப் பாது காக்க சிறந்த தீர்வு அது கனேடிய எல்லைக்குள் நுழை யாமல் தடுத்து நிறுத்துவதாகும். இந்நிலையில் வெளிநாடுகளில் இருந்து வரும் அனைத்துப் பயணிக ளுக்கும் விமான நிலையத்திலேயே கோவிட் பரிசோ தனைகளை மேற்கொள்ள மத்திய அரசை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறோம் என ஒன்ராறியோவின் சுகாதார அமைச்சர் கிறிஸ்டின் எலியட் கூறினார்.

ஒமைக்ரோன் திரிபு வைரஸ் மிகவும் வேகமாகப் பரவக்கூடியதென ஆரம்ப கட்ட தரவுகள் வெளிப்படுத்துவதாக கனடாவின் பொது சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. எனினும் இது தொடர் பான மேலதிக ஆய்வுகள் சர்வதேச அளவில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கனடா பொதுச் சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# இந்தியா - நியூசிலாந்து டெஸ்ட் பரபரப்பான நிலையில் சமன்!

காள்பூர், நவ. 30

நியூசிலாந்து அணிக்காக 9ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ரவீந்திரா, அஜாஸ் இணையை பிரிக்க முடியாதுபோனதால் பரபரப்பான முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டியின் இறுதிநாள் ஆட்டம் கான்பூரில் நேற்று தொடர்ந்தது. நான்காம் நாள் ஆட்டம் முடிவில் 4 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்திருந்தது. ரொம் லதம் 2 ஓட்டங்களுடனும், வில்லியம் சம்மர்வில் ஓட்டம் எதையும் பெறாமலும் இருந்தனர்.

நேற்றைய நாள் ஆட்டம் தொடங்கிய போது இருவரும் துடுப்பாட்டத்தைத் தொடர்ந்தனர். இந்த இணை இந்திய பந்துவீச்சாளர்களை இலாவகமாக சமாளித்தது. நிதானமாக அணியின் ஓட்ட வேகம் அதிகரித்தது. சம்மர்வில் 36 ஓட்டங்களுடன் யாதவின் பந்தில் விழ, அடுத்து வந்தார் அணித் தலைவர் கேன் வில்லியம்சன்.

இந்தநிலையில் லதம் 52 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். வில்லியம்சன் 24 ஓட்டங்களையே எடுத்தார். ஆனால், ஏனைய வீரர்கள் எவரும் இரு வரிசை இலக்கத்தை தொடவில்லை. மாலை நேரமும் நெருங்கவே போட்டி பரபரபரப்பை அடைய ஆரம்பித்தது. இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு அண்மையாக இருந்த நிலையில், 9ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ரச்சின் ரவீந்திரா, அஜாஸ் பட்டேல் இணை பொறுமையாக ஆடி அந்த வாய்ப்பை தடுத்தது.

ஒரு விக்கெட்டை கைப்பற்றுவதற்காக நடந்த பெரும் போராட்டத்தால் போட்டி பரபரப்பானது. இந்தப் பரபரப்புக்கு மத்தியில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இறுதியில் நியூசிலாந்து அணி 98 ஓவர்களை எதிர்கொண்டு 9 விக்கெட்கள் இழப்புக்கு 195 ஓட்டங்களைப் பெற்றது. ரச்சின் ரவீந்திரா 18 ஓட்டங்கள், அஜாஸ் பட்டேல் 2 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர்.



முன்னதாக, வியாழக்கிழமை தொடங்கிய போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல் இனிங்ஸில் 345 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 296 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது இனிங்ஸில் 234 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியிருந்தது.

போட்டியின் நாயகனாக ஸ்ரேயாஸ் ஐயர் தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாவதும் இறுதியுமான போட்டி மும்பையில் டிசெம்பர் 3ஆம் திகதி தொடங்குகிறது.

(ஐ)

# மேற்கிந்தியாவுடனான டெஸ்ட்; இலங்கை முதல்நாளில் 113/1

காலி, நவ. 30

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல்நாளில் ஒரு விக்கெட் இழப்புக்கு 113 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இலங்கை வந்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் தற்போது விளையாடி வருகின்றது. முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை வெற்றி பெற்ற நிலையில், இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது.

ஆனால், போட்டி தொடங்கும் முன்பாகவே கடும் மழையால் போட்டியை ஆரம்பிக்க முடியவில்லை. பிற்பகல் 2.30 மணியின் பின்னரே போட்டி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி, பதும் நிசங்க, திமுத் கருணாரத்ன ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். சிறப்பான தொடக்கத்தை ஏற்படுத்திய இந்த இணை இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களை கடந்தது.

42 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் திமுத் கருணாரத்ன சேஷின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதையடுத்து ஒஸத பெர்னாண்டோ களமிறங்கினார்.

34.4 ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. அப்போது இலங்கை அணி ஒரு விக்கெட்டை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பதும் நிசங்க 61 ஓட்டங்களுடனும், ஒஸத பெர்னாண்டோ 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இன்று போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டமாகும். (ஐ)






# ஹர்பஜன் சிங்கை முந்தினார் அஸ்வின்!

கான்பூர், நவ. 30

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்கள் எடுத்த 3ஆவது இந்திய பந்துவீச்சாளர் என்ற பெருமையைத் தமிழரான ஆர். அஸ்வின் பெற்றுள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் தொடக்க வீரர் ரொம் லதாமின் விக்கெட்டை வீழ்த்தினார்.

அஸ்வின். இது அவருடைய 418ஆவது டெஸ்ட் விக்கெட் ஆகும். இதன்மூலம் 417 விக்கெட்கள் எடுத்திருந்த ஹர்பஜன் சிங்கை முந்தினார். அத்துடன், அதிக டெஸ்ட் விக்கெட்கள் கைப்பற்றிய 3ஆவது இந்திய பந்துவீச்சாளர் என்ற பெருமையையும் அஸ்வின் பெற்றுள்ளார்.

80 டெஸ்ட் போட்டிகளில் இந்த இலக்கை அவர் எட்டியுள்ளார். அடுத்ததாக கபில் தேவின் 434 விக்கெட்களைத் கடந்தால் இரண்டாவது இடம் கிடைத்துவிடும். இந்த சாதனையை விரைவில் நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிக டெஸ்ட் விக்கெட்ககளை கைப்பற்றிய இந்திய வீரர்களின் வரிசையில் அனில் கும்ப்ளே 132 போட்டிகளில் 619 விக்கெட்களை வீழ்த்தி முதல் இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மகாவலி ஆற்றில் வீழ்ந்த காருடன் காணாமல்போனவர் சடலமாக மீட்பு

கொழும்பு, நவ. 30

மகாவலி ஆற்றில் கவிழ்ந்த காரில் இருந்து காணாமல் போன நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கண்டி - குருதெனிய வீதியில் இலுக்மோதர பகுதியில் கார் ஒன்று மகாவலி ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி இருந்தது.

விபத்தில் சிக்கிய இருவர் மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

எனினும், காருடன் மற்றுமொரு நபர் காணாமல்போயிருந்தார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், காணாமல் போன 39 வயதுடைய நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.(இ)

# போதை மாத்திரைகள், வாள்களுடன் முன்னாள் இராணுவ சிப்பாய் கைது

புத்தளம், நவ. 30

போதை மாத்திரைகள் மற்றும் ஐந்து வாள்களுடன் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம், செம்பந்தலுவ பிரதேசத்தை சேர்ந்த நபரே சுற்றிவளைப்பின்போது இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம், செம்பந்தலுவ பிரதேசத்தில் புத்தளம் போதைப் பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகள் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த நபரிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 5 வாள்கள், 3 கிராம் 80 மில்லிகிராம் போதை மாத்திரைகள் உள்ளடங்கிய 12 கார்ட்கள் என்பன கைபற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் புத்தளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ)




# சுதந்திர ஊடக முடக்கம் என்பது நாட்டின் முடக்கத்துக்கு ஒப்பானது

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 30

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் மாவீரர் நாளன்று ஊடகவியலாளர் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து நீதியானதும், சுயாதீனமானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தி அறிக்கையிடலில் ஈடுபட்ட ஊடகவியலாளர் மீது கடந்த 27 ஆம் திகதி மிலேச்சத்தனமான முறையில் திட்டமிட்ட வகையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் படுகாயமடைந்த நிலையில், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் கிழக்கில் வசித்து வரும் குறித்த ஊடகவியலாளர் கடந்த 27 ஆம் திகதி செய்தி சேகரிப்புக்காக முல்லைத்தீவு சென்று அங்கிருந்து வீடு திரும்பிய நிலையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் பெயர் பலகையை ஒளிப்படம் எடுத்த நிலையிலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மூன்று இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டதுடன், பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது வெறும் கண்துடைப்பு கைதாகவே நாங்கள் பார்க்கின்றோம்.




இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து நீதியானதும், சுயாதீனமானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெறும் சம்பவங்களை பார்கின்ற போது,எம்முள் அச்ச உணர்வு ஒன்று தோன்றுவதுடன், நாடு இராணுவ மயமாக்கலினை நோக்கி நகர்கின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது.இதனை கூட்டமைப்பு என்ற வகையில் பலமுறை உரக்கச் சொல்லியிருக்கின்றோம்.

இது குறித்து இராணுவத் தளபதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ஆகியோர் மௌனம் காக்கின்றமை வருத்தமளிக்கின்றது.

குறித்த இருவரும் இது தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

தற்போதைய அரசின் கடந்த ஆட்சிக்காலத்தின் போதும் மிக மோசமான ஊடக அடக்குமுறைகள், ஊடகவியலாளர்களைக் கடத்திப் படுகொலை செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இந்தநிலையில் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட மாட்டார்கள் எனக் கூறி தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்தது. எனினும், தற்போதைய அரசில் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

குறிப்பாக பிழைகளைச் சுட்டிக்காட்டுகின்ற ஊடகவியலாளர்கள் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்படுகின்றார்கள். இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

எமது மக்களுக்கும் சுதந்திரமில்லை, ஊடகவியலாளர்களுக்கும் சுதந்திரம் இல்லை. சுதந்திர ஊடக முடக்கமானது ஒரு நாட்டின் முடக்கத்துக்கு ஒப்பானது.

அரச சார்பான தமிழ் அரசியல்வாதிகள் இந்த அரசின் இவ்வாறான செயல்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதும் பக்கச் சார்பாகச் செயல்படுவதும் அவர்களுக்குச் சார்பாகச் செயல்பாடுகளைச் சரி எனவும் நிரூபித்துக் கொண்டுள்ளார்கள்.

இந்த அரசின் காலத்திலேயே எம் மக்கள் பல இன்னல்களை அதிகளவாக அனுபவித்தனர் அனுபவித்துக்கொண்டும் வருகின்றனர்” - என்றுள்ளது. (இ)

# 350 அடி பள்ளத்தில் வீழ்ந்து வான் விபத்து

## சாரதி படுகாயம்

அப்புத்தளை, நவ. 30

அப்புத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட , அப்புத்தளை ‘வை’ சந்தியில் சுமார் 350 அடி பள்ளத்தில் வீழ்ந்து வானொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பிலிருந்து தியத்தலாவைக்குப் பயணித்துக் கொண்டிருந்த வானே நேற்று அதிகாலை 4.40 மணியளவில் இவ் வாறு விபத்துக்குள்ளானது.

வானில் சாரதி மாத்திரம் பயணித்துள்ள நிலையில் அவர் படுகாயமடைந்துள்ளார். (இ)





# தடை செய்யப்பட்ட கிருமிநாசினிகளை வாகனத்தில் கடத்திய இருவர் கைது

கொழும்பு, நவ. 30

தடை செய்யப்பட்ட கிருமிநாசினிகளை வாகனத்தில் கடத்திச் சென்ற இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது தலவ பிரதேசத்தில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது. (இ)

ஈழநாடு
Eelanadu

# மத்தியின்கீழ் ஆதார மருத்துவமனைகள் 13ஆவது திருத்தத்துடன் முரண்படுகிறது!

## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு



கொழும்பு, நவ. 30

**அரசாங்க மருத்துவனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் மற்றும் மனிதவளம் என்பன பகிர்ந்தளிக்கப்படும் முறை தொடர்பில் விரைவில் மதிப்பீட்டை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.**

சில மருத்துவமனைகளில் மருத்துவர்கள் மேலதிகமாக இருக்கும் நிலையில், சில கிராமிய மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக பாராளுமன்றத்தில் நடைபெற்ற சுகாதார அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஆதார வைத்தியசாலைகளை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வருவதன் ஊடாக சுகாதார நிலைமைகளை முன்னேற்றமான நிலைக்குக் கொண்டுவரக்கூடியதாக இருந்தாலும், மாகாண சபைகளின் கீழ் உள்ள விடயத்தை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டுவருவது 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய அதிகாரப் பரவலாக்கத்துடன் முரண்படுவதால் அதனை ஏற்றுக்கொள்வது சிக்கலுக்குரியது என அவர் இங்கு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றை அமைச்சரவைக்கு முன்வைப்பது பொருத்தமானது என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் அவ்வப்போது சுகாதாரத்துறையினரால் வேலை நிறுத்தப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும், சம்பள உயர்வு வழங்கும்போது பொதுவான கொள்கையொன்றை உருவாக்கி அதற்கமைய நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் உபுல் கலபதி இக்குழு முன்னிலையில் குறிப்பிட்டார்.

கடந்த சில வருடங்களில் நாட்டுக்குள் மேலதிகமான ஔடதங்கள் இறக்குமதிசெய்யப்பட்டமை தொடர்பில் குழு விசேட கவனம் செலுத்தியதுடன், சில வருடங்களில் தேவைக்கு அதிகமான மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

ஔடதங்கள் தொடர்பில் தேசிய தகவல் கட்டமைப்பொன்றை ஆரம்பிக்கவிருப்பதாகவும்,நாட்டில் உள்ள சகல மருத்துவமனைகளையும் இதில் இணைத்துக் கொள்ள விருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அல்பிட்டி ஆதார வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகவும், இந்தக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க சுட்டிக்காட்டினார்.

பொலநறுவை சிறுநீரக வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டபோதும் அது இன்னும் முறையாகச் செயற்படாமை குறித்தும் குழு விசேடகவனம் செலுத்தியது. கோவிட் தடுப்பூசி போடப்பட்ட சில நபர்களின் தகவல்கள் அது தொடர்பாக நடைமுறையில் உள்ள தகவல் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படாமை பிரச்சினைக்கு உரியது என பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே குழுவில் தெரிவித்தார். தற்போது காணப்படும் நிலைமையை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

1990 சுவசெரிய அவசர அம்புலன்ஸ் சேவைக்கு இதுவரை 46 இலட்சத்து 33 ஆயிரம் அழைப்புக்கள் கிடைத்திருப்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். குறித்த சேவையை முன்னெடுப்பதற்கு 2022ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 180 கோடி ரூபாய் என்றும், இது போதுமானது அல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார். பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியது போன்று ஆகக்குறைந்தது மேலும் 120 கோடி ரூபாயை இச்சேவைக்கு ஒதுக்குவது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருப்பதாக சுகாதார அமைச்சு, குழுவில் தெரிவித்தது.

719 ஆயுள்வேத பட்டதாரிகள் வேலையில்லாமல் இருப்பதாகவும் கூட்டத்தில் தெரியவந்தது. உள்நாட்டில் ஆயுள்வேத மருந்தகங்களை திறந்து அவர்களுக்கு நியமனம் வழங்கும் திட்டம் உள்ளதாக இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார். இக்கூட்டத்தில் 20இற்கும் மேற்பட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும்பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டதுடன், சுகாதாரத் துறை அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

## மரண அறிவித்தல்



மலர்வு 03 - 09 - 1964

உதிர்வு 26 - 11 - 2021

### திருமதி
### ஹரின் செல்லையா பாபு

கயானாவைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட ஹரின் செல்லையா அவர்கள் 26-11-2021 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற Roopnarine Rumbally - shamwtie தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கதிர்வேல் ஆசாரி சங்கரம்மா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், செல்லையா (பாபு) அவர்களின் அன்பு மனைவியும், சமந்தா, ராபி ஆகியோரின் அன்புத் தாயாரும், Brandon அவர்களின் அன்பு மாமியும், ரவி, ரஜின், chef ஆகியோரின் அன்புச் சகோதரியும், Zabeeda, Poonam, Sunita ஆகியோரின் அன்பு மைத்துனியும், Richard, Randy, Andy, Anjali, Neelan, Nikita ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற ராஜாதித்தன், அருச்சனா, ஞானவள்ளி, ரேணுகா, சுகந்தி, கனாதீபன், சரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுரேந்திராணி, மேகலா, மீனாட்சி சுந்தரம், சுரேந்திரன், பாக்கியநாதன், கவிதா, சுகன்யா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

**பார்வைக்கு**
Get Direction
Saturday, 04 Dec 2021 6:00 PM - 9:00 PM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada

**தகனம்**
Get Direction
Sunday, 05 Dec 2021 11:00 AM - 1:00 PM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
Meeting ID: 847 4351 4489
Passcode: 987404

தொடர்புகளுக்கு:
**செல்லையா(பாபு) - கணவர்**
Mobile : +16475444567

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மன்னாரில் கடும் மழை; 7,257 குடும்பங்கள் பாதிப்பு!

மன்னார், நவ. 30

மன்னாரில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையால் 7 ஆயிரத்து 257 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 519 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் 7 ஆயிதத்து 252 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 499பேரும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 20 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மன்னார் பிரதேச செயலர் பிரிவில் 367 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 380 பேர் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து 11 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அத்தியாவசிய உதவிகளை மாவட்ட செயலகத்தின் ஊடாக மன்னார் பிரதேச செயலகம், மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஆகியவை இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

மன்னார், பேசாலை, தாழ்வுபாடு, தோட்டவெளி, மற்றும் மன்னார் நகர பகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களும் மழை வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
பகல்
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-துப்பறிவாளன்,அருவி திரைப்படக் காட்சிகள்



4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்
இரவு
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி படித்ததில் பிடித்தது-கவிஞர் சோ.பத்மநாதன்



10.00 மணி : நேருக்கு நேர்

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு